விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஷூ பங்குனி மீ 04-ம் உ | சனிக்கிழமை | (17 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபான் 19 | ஓசை 27

## தமிழ்க்குழு அகதிகள் ஒரிஸாவில் பெரும்பாடு; நேரில் பார்த்த ஈ. பி. டி. பி. தகவல்!

(சென்னை)

ஒரிஸாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் போதிய வசதிகளின்றி அவதிப்படுவதாக ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது இரண்டு கிராமங்களில் தங்கியுள்ள இவர்களை இந்த முன்னணி நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஒரிஸா மொழியே இங்கு பயன்படுத்தப்படுகிறது. ஆதிவாசிகள் முதன்மை பெற்றவர்களாக இருக்கின்றனர். இதனால் அவர்கள் தமிழ் அகதிகளை எதிர்க்கின்றனர். எனவே தாமும் ஆதிவாசிகளாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று கணபதி 'என்ற அகதி ஒருவர்' தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகளுக்கு பொருட்களை வாங்குவதற்கு முன்னூற்றி ஐம்பது கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியுள்ளது என இவர்களைக்- (6 ஆம் பக்கம் பார்க்க)

# "அரசியல் ரீதியாக அழிக்க வந்தவர்களை வென்றோம்"

## ஆயுதப் போராட்டம் இன்று மக்கள் போராட்டமாக மலர்ந்துவிட்டது

### யாழ். பல்கலைக்கழகத்தில் மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

"இந்திய ஆக்கிரமிப்புப் படை இங்கு வந்த காலப்பகுதியில் அரசியல் ரீதியாக எம்மை அழிப்பதற்கு உள்ளாலும் வெளியாலும் பல தீய சக்திகள் செயற்பட்டன."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு மகேந்திரராசா (மாத்தயா) நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கடந்த நாற்பது வருடமாக நடைபெற்றுவரும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சட்டத்துக்குட்பட்ட அகிம்சா வழியில் மேற்கொள்ளப்பட்டபோது இராணுவ பலத்தால் அடக்கி ஒடுக்கி நசுக்க முற்பட்டபோதுதான் ஆயுதரீதியான போராட்டம் உருவானது என்றார்.

எமது போராட்டகாலத்தை (6-ஆம் பக்கம் பார்க்க)

## "ஆவணங்களை பாதுகாக்க பல். கழகம் உதவவில்லை"

(யாழ்ப்பாணம்)

\- மகேந்திரராசா

''வரலாற்று ரீதியாகப் பயனளிக்கக்கூடிய வகையில் எமது எதிர்காலச் சந்ததிகளுக்கென சேர்த்து வைக்கப்பட்ட பெருந்தொகையான ஆவணங்கள் அழிக்கப்பட்டன. அவற்றைப் பாதுகாப்பதற்கு நாம் எடுத்த முயற்சிகளுக்குப் பல்கலைக்கழகம் ஆதரவோ ஒத்துழைப்போ தரவில்லை''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.



## மட்டக்களப்பு புதிய அரச அதிபராக யோகா பதவி ஏற்றார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிப திரு. யோகநாதன் யாழ்ப்பாணத்தில் காரியாதிகாரியாக

## பாரதம் மிரட்டாது வி. பி. சிங்

(புதுடில்லி)

வெளியுறவுக் கொள்கையில் பாரதம் சிறிய அயல் நாடுகளுடன் மிரட்டல் தனமாக நடந்துகொள்ள மாட்டாது என பாரதப் பிரதமர் வி. பி. சிங் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

அயல் நாடுகளுடன் பாரதம் நட்புறவு ரீதியான உறவுகளை வைத்துக்கொள்ள விரும்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

## புங்குடுதீவு ம. வி. பரீட்சை முடிவுகள்

(புங்குடுதீவு)

கடந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 4 மாணவிகள் திறமைச்சித்தி பெற்றுள்ளனர்.

கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவிகளான செல்வி. பா. கேதீஸ்வரி ஒருAயும், ஒரு Bயும், ஒரு Cயும், ஒரு Sயையும் பெற்றார்.

செல்வி வே. புஸ்பலதா 2 Bயும், ஒரு Cயும், ஒரு Sயையும் பெற்றார். செல்வி சி. கௌசலாதேவி ஒரு B யும், ஒரு Cயும், 2 S யையும் பெற்றார்.

## ரயில்நோக்கி கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஓடும் ரயிலை நோக்கி இளைஞர்கள் கல்லெறிகிறார்கள் என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தெல்லிப்பழைக்குப் பல்லாகத்திற்கும் இடையிலும் கோண்டாவில் பகுதியிலும் தினமும் நடைபெறுவதாக யாழ். ரயில் நிலைய அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேன்முறையீடுகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இருபத்தையாயிரம் ஆசிரியர் தெரிவுக்கான மேன்முறையீடுகள் அனைத்தும் தற்காலிகமாக உடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மறு அறிவித்தல் வரும் வரை எவருடைய முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என பிரதி கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கிறார். (லோ)

## ஏப்ரலில் முறைசாராக் கல்விப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1989ம் ஆண்டு முறைசாரா கல்விப்பிரிவில் பயிற்சி பெற்றோருக்கான பரீட்சைகள் ஏப்பிரல் மாதம் ஒன்பதாம், பத்தாம், பதினோராம், திகதிகளில் நடைபெறும் என முறைசாரா கல்விப் பிரிவுக்கான அதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவிக்கிறார். (லோ)

## பூநகரியில் நினைவுத் தூபி

1987.ம் ஆண்டு ஜூலை மாதம் பூநகரி கோட்டை ஸ்ரீலங்கா இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டபோது வீர மரணமடைந்த தியாகிகள் ஏழுபேரின் நினைவுத் தூபி பூநகரி மன்னார் வீதி சந்தியில் வெகு துரிதமாக நிறுவப்பட்டு வருகி .

இந் நினைவுத் தூபி கூடிய விரைவில் திறந்து வைக்கப்படுமென நினைவுத் தூபியை நிறுவும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பூநகரி வர்த்தகர் சங்கப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

2 Bயும், ஒரு Cயும், ஒரு Sயையும் பெற்றார். செல்வி சி. கௌசலாதேவி ஒரு Bயும், ஒரு Cயும், 2 Sயையும் பெற்றார்.

## ரயில்நோக்கி கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஓடும் ரயிலை நோக்கி இளைஞர்கள் கல்லெறிகிறார்கள் என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தெல்லிப்பழைக்கும் மல்லாகத்திற்கும் இடையிலும் கோண்டாவில் பகுதியிலும் தினமும் நடைபெறுவதாக யாழ். ரயில் நிலைய அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாணுக்குள் பாம்புத்தலை

(பதுளை)

பதுளையில் ஹின்டகொட என்ற இடத்திலுள்ள பேக்கரியில் தயாரிக்கப்பட்ட பாணுக்குள் பாம்புத் தலை இருந்ததாம். இந்தப்பாணைச் சாப்பிட்ட, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகள் பதுளை அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(6-ஆம் பக்கம் பார்க்க)

## குளிக்கச்சென்றவர் பிணமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடலில் குளித்துக்கொண்டிருந்த போது காணாமல் போன இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் தன் நண்பர்களுடன் அரியாலைக் கடலில் குளித்து விளையாடிக் கொண்டிருந்த போது அலையில் சிக்குண்ட வில்பிரட் ரஞ்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் பயிலுநர் ஆசிரியர் நியமனம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு அரசாங்க அதிபர் பிரிவுக்கான பயிலுனர் ஆசிரியர் தெரிவின் மீள்பரிசீலனையின் முடிவின்படி பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பக்கல்விக்கு ஆர். சேதீஸ்வரி, பி. ஜே. சாந்தினி த. தவமணி, சி. ப. பரமலிங்கம். அ. ஜெயவதி ஆகியோரும், கணிதத்திற்கு ச. கோகுலவரதனும், ஆங்கிலத்திற்கு ச. செந்தில்நாயகியும், சித்திரத்திற்கு சு. சந்தானலட்சுமியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

"இந்திய ஆக்கிரமிப்புப் படை இங்கு வந்த காலப்பகுதியில் அரசியல் ரீதியாக எம்மை அழிப்பதற்கு உள்ளாலும் வெளியாலும் பல தீய சக்திகள் செயற்பட்டன."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு மகேந்திரராசா (மாத்தயா) நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது கூறினார்.


மேலும் அவர் பேசுகையில் கடந்த நாற்பது வருடமாக நடைபெற்றுவரும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சட்டத்துக்குட்பட்ட அகிம்சா வழியில் மேற்கொள்ளப்பட்டபோது இராணுவ பலத்தால் அடக்கி ஒடுக்கி நசுக்க முற்பட்டபோதுதான் ஆயுதரீதியான போராட்டம் உருவானது என்றார்.

எமது போராட்டகாலத்தை

(6-ஆம் பக்கம் பார்க்க)

ஆவணங்கள் அழிக்கப்பட்டன. அவற்றைப் பாதுகாப்பதற்கு நாம் எடுத்த முயற்சிகளுக்குப் பல்கலைக்கழகம் ஆதரவோ

...நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.



## மட்டக்களப்பு புதிய அரச அதிபராக யோகா பதவி ஏற்றார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. ஆர். யோகநாதன் நேற்றுப் பதவியேற்றார்.

திரு. யோகநாதன் யாழ்ப்பாணத்தில் காரியாதிகாரியாகவும், உதவித் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றிய பின்னர் மட்டக்களப்பில் உதவித் தேர்தல் அதிகாரியாகவும் மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார் பின்னர் கொழும்பில் புனர்வாழ்வு புனரமைப்பு உதவி ஆணையாளராகவும் கடமையாற்றினார். நேற்று முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராகப் பணியாற்றத் தொடங்கியிருக்கிறார்.

உதவி அரசாங்க அதிபராகவும், உதவித் தேர்தல் ஆணையாளராகவும் புனர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தங்கக் கட்டியுடன் படகு பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த கண்ணாடி இளையிலான படகொன்றை இடைமறித்துச் சோதனையிட்ட இலங்கைக் கடற்படையினர், மூன்று தங்கக் கட்டிகளை மீட்டதுடன் படகில் பிரயாணம் செய்து கொண்டிருந்த மூன்று இலங்கையரையும் கைது செய்துள்ளனர்.

## மட்டக்களப்பு வீதி புனரமைப்பிற்கு 57.7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

அவசரப் புனர்வாழ்வு-புனர்நிர்மான வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பெருந்தெருக்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன. இதற்காக 57.7 மில்லியன் ரூபா பணத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் திரு. ஜஸ்ரின் இராஜேந்திரா தெரிவித்தார்.

குறிப்பாக திருகோணமலை மட்டக்களப்பு வீதிக்கு 33 மில்லியன் ரூபாவும், ஆயித்தியமலை வவுணதீவு வீதிக்கு 3 8 மில்லியன் ரூபாவும், ஹெர்ஸ்மன் வீதிக்கு 5.2 மில்லியன் ரூபாவும், செங்கலடி பதுளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்கள் மதிய உணவு தொடர்பாக

## பேக்கரிக்கு சீல் வைப்பு உரிமையாளர், ஊழியர் கைது

(ஹட்டன்)

மதிய உணவு பணிஸ் சாப்பிட்டதால் ஆஸ்பத்திரியில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டது தொடர்பாக அந்த பேக்கரி உரிமையாளரும், ஊழியர்களும் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன் கிழமை இங்குள்ள ஸ்ரீ பாத மகா வித்தியாலயத்தில் இந்த மாணவர்கள் தமது மதிய உணவாக பணிஸ் சாப்பிட்டதும் வயிற்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சீமெந்துத் தொழிற்சாலைக்கு வெடி கருவி

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இலங்கை இராணுவத்திடமும் இந்திய இராணுவத்திடனும் இருந்து தேவையின்போது மட்டும் வழங்கப்பட்ட கல்லுடைக்குப் வெடிப் பொறி கருவி (எஸ்போ ட்) சீமெந்துத் தொழிற்சாலை அதிகாரியிடம் மீண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. லோகேஸ்வரன் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டுடன் பேச்சு வார்த்தை நடாத்திச் சென்றுள்ளார்.

கல்வி, தொலைத்தொடர்பு புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் சம்பந்தமாக அப்பேச்சு வார்த்தை இடம் பெற்றதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பாதிப்படைந்து இன்னமும் நிவாரணம் பெறாதவர்களின் கொடுப்பனவுகளை விரைவில் வழங்குவது சம்பந்தமாகவும் அப்பேச்சு இடம் பெற்றுள்ளது.

நாளை மறுதினம் புனர்வாழ்வு, புனரமைப்பு சம்பந்தமான கூட்டமொன்று கொழும்பில் நடைபெற உள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன ஒழிப்பு நடவடிக்கை எதையும் எதிர்கொ[illegible] தயார்

-மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

இனவாதம் எமது பலம் அல்ல. எமது மக்களின் சக்திதான் இந்த வகையில் எத்தகைய இன ஒழிப்பு நடவடிக்கைகள் ஏற்பட்டாலும் அதை எதிர் கொள்ளத் தயாராக உள்ளோம். தற்போதைய ஜனாதிபதி பிரேமதாச எம்முடன் யுத்தம் புரியத் தயாராக இல்லை நாம் என்றும் மக்கள் பக்கமே என்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்[illegible] தலைவர் மகேந்திர[illegible]சா பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் கேள்விகளுக்கு பதிலளித்த மகேந்திரராசா எமது ஜனநாயக சமாற்றங்களைக் கடந்தகால பாரம்பரிய அரசியலுடன்தொடர்புபடுத்துவது தவறு என்றும் கடந்தகால

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹாபர்வியூவில் இருந்து இராணுவம் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஹாபர்வியூ ஹோட்டலில் இருந்து இலங்கை இராணுவம் இன்று வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(6-ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் நினைவுத் தூபி

1987-ம் ஆண்டு ஜூலை மாதம் பூநகரி கோட்டை ஸ்ரீலங்கா இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டபோது வீர மரணமடைந்த தியாகிகள் ஏழுபேரின் நினைவுத் தூபி பூநகரி மன்னார் வீதி சந்தியில் வெகு துரிதமாக நிறுவப்பட்டு வருகி .

இந் நினைவுத் தூபி கூடிய விரைவில் திறந்து வைக்கப்படுமென நினைவுத் தூபியை நிறுவும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பூநகரி வர்த்தகர் சங்கப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

## இன்ரசிற்றி பற்றி முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான இன்ரசிற்றியில் சேவையில் ஈடுபடுத்துவது பற்றி இன்னும் எதுவித அறிவிப்பும் வரவில்லை என்று யாழ். ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக சில பத்திரிகையில் வெளிவந்த செய்திகளில் உண்மையில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (தி)

## பூநகரியில் 12 மாணவர்கள் தகுதி பெற்றனர்

(பூநகரி)

பூநகரி மகா வித்தியாலயத்திலிருந்து அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 18 மாணவர்களுள் 16 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 12 மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## சங்கத்திற்கு புதிய ட்ராக்ரர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கம் சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான, (பெட்டியுடன் கூடிய) புதிய 'டிராக்ரர்' ஒன்றை கடந்த வாரம் கொள்வனவு செய்துள்ளது.

இச் சங்கத்தில் ஒரே ஒரு லொறி மட்டுமே பாவனையில் இருந்தது;

இக் கஷ்டத்தை நீக்கும் பொருட்டே மேற்படி புதிய டிராக்ரர் பெறப்பட்டுள்ளது. (22)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

**போட்டோஸ்ரட்**

தெளிவான போட்டோஸ் ரட் பிரதிகளை விரைவாக பெற்றுக்கொள்ள நாடுங்கள் தரமான றோனியோ பிரதிகளை தாமதமின்றி பெற்றுக்கொள்ள நம்பிக்கை நிறுவனம் 'கிளீன் கட்' B 224

**சேவை**

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டாமா, கோதுமை, அரிசிக் குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M- G. M. No. 777, K. K. S. Road, Jaffua.

(B/68)

**கோழிச்குஞ்சு விநியோகம்**

Prima Lohman சிவப்பு வெள்ளை முட்டைக் குஞ்சுகள் புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet Hylie Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

NALLUR FARM CENTRE, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (B/189)

ஆதிகாலம் தொட்டு

# மட்டக்களப்பு இரவு ரயில்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

யாழ். கொழும்பு இரவு ரயில்சேவை கடந்த ஒன்பதாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ள்டுளதையடுத்து மட்டக்களப்புக்கான இரவு ரயில் சேவையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது மட்டக்களப்பு கொழும்பு உதயதேவி ரயில் சேவை பகலில் நடைபெற்றுவருகிறது.

இங்கு இரவு சேவையை ஆரம்பிக்குமாறு கிழக்கு மாகாண மக்கள் போக்குவரத்து அமைச்சரிடம் கேட்டுவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தலைமன்னார்-கொழும்பு இரவு ரயில் சேவையும் விரைவில் நடைபெறவுள்ளது,

# யாழ். தெற்கு கோத்தணி மெய்வல்லுனர் போட்டி முடிவு

யாழ்ப்பாணம் தெற்கு கோத்தணி மெய்வல்லுனர் போட்டி அண்மையில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில், கொத்தணி அதிபர் திரு. ஜி. பி. அல்பிறட் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. தங்கராசா கலந்துகொண்டார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற சிறந்த வீரர்களும், பாடசாலைகளும் வருமாறு:

*11 வயது ஆண்:* பி. எடிசன் பிரசன்னா (புனித றொக்ஸ் வித்தியாலயம்)

*13 வயது ஆண்;* இணைந்த வீரர்கள் 1. ஜி எடின் ஜோஜ் (புனிதயோசப்வித்தியாலயம்) 2. யோ.மேரியோனிஸ்(புனித சாள்ஸ் வித்தியாலயம்)

*15 வயது ஆண்:* சி. கி. பேனாட் (புனித சாள்ஸ் வித்தியாலயம்)

*17 வயது ஆண்:* பி. அமலராசன் (புனித யேம்ஸ் மகா வித்தியாலயம்)

*19 வயது ஆண்:* இணைந்த வீரர்கள் 1. சி. அனிஸ்ரஸ் (புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) 2. அ. லெ. பியரீசன் (புனித யேம்ஸ் மகா வித்தியாலயம்)

*11 வயது பெண்:* ம, மேரி கிளான்சியா ((புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம்)

*13 வயது பெண்:* கு. தர்சினி (ககாழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்)

*15 வயது பெண்:* ம.பவிதா (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)

*17 வயது பெண:* பா. வனிதா (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)

*19 வயது பெண்:* செ.ஜெஸ்லின் (புளித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம்)

*அஞ்சல் ஓட்டம்:* எல்லா வயது பிரிவுகளிலும் கூடிய புள்ளி பெற்ற பாடசாலை ஆண்கள்: புனித சாள்ஸ் வித்தியாலயம் பெண்கள்: கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

# பிரஜாவுரிமை பெற்ற மக்களுக்கு வவுனியாவில் காணி வழங்கல்

(வவுனியா)

காணிப் பங்கீட்டில் புதிய முறைசள் வவுனியா மாவட்டத்தில் கடைப்பிடிக்க இருப்பதாக நம்பசரமாகத் தெரிய வந்துள்ளது. இப் புதியமுறைகள் பற்றித் தெரியவந்துள்ளதாவது,

கடந்த காலங்களில் வவுனியாப் பிரதேசத்தில் அடாத்தான முறையில் பிடிவரும் மூறையற்ற காணிகள் மக்களால் பிடித்துவைக்கப்பட்டுள்ளன. அவை;

விவசாயம் செய்யாமல் இருக்கும் மத்திய வகுப்புக் காணிகள்

கடந்தகாலங்களில் உணவு உற்டத்திக்காக எடுக்கப்பட்டுத் தரிசாகவிடப்பட்டவை

அனுமதியின்றி வெட்டி காலக்கிரமத்தில் கைவிடப்பட்டவை

அனுமதியின்றிப் பிடிக்கப்பட்டு கைவிடப்பட்டவை.

இவ்வாறான காணிகள் பலவற்றில் கடந்தகாலங்களில் வன்முறையால் இடம்பெயர்ந்த பெரும் தொகையான இந்திய மக்கள் குடியேறினார்கள். இவ்வாறான

வட பகுதி கடற்றொழிலாளருக்கு மலிவு விலை

## ஆலயத்திலும் கொள்ளை

(வேலணை)

வேலலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி சாதனமான யுனிற் என்னும் பொருளும் அதோடு அம்புலி செற்றும் அதனோடிணைந்த பல பொருட்களும் சென்ற 14-ஆம் திகதி (14-3-90) புதன் கிழமை இரவு கொள்ளையர்களால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக வேலணையில் உள்ள புலிகளின் முகாம் பொறுப்பாளருக்குபுகார் செய்யப்பட்டுள்ளது.

## புலமைப் பரிசில் பெற்று ஜேர்மன் பயணம்

மன்னார் மாவட்ட புள்ளி விபர அதிகாரியான திரு. கே. மகேந்திரலிங்கம் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் தேர்ச்சிபெற புலமைப் பரிசில் பெற்று அங்கு செல்கிறார்.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் புள்ளி விபர அதிகாரியாக கடமையாற்றிய இவர் கம்பியூட்ட்ர் கல்வியிலும் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிராமசேவகர் பிரிவுகள் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 28 கிராமசேவையயளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 13 கிராமசேவையாளர் பிரிவுகளாக இருந்த பிரதேசம் 28 ஆக பிரிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் தச்சுத்தொழில் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தச்சுத்தொழிற் சாலைகளில் மீண்டும் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

பதினாறு வயதுக்கும் இருபத்திரண்டு வயதுக்கும் இடைப்பட்டவர்கள். (எட்டாம் வகுப்பு சித்தி) தமது விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக சிறுசைத்தொழில் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தாண்டு புதுவிழா

வேலணைக் கூட்டத்தில் பேச்சு

# நிரந்தர அமைதி ஏற்படும்வரை எமது போராட்டம் தொடரும்

(தீவுப்பகுதி)

எமது மக்களின் விடிவிற்காக நீண்டகால கண்னோட்டத்துடன், தொலை நோக்கு சிந்தனையுடன். உறுதியான கட்டுச் கோப்புடனும் எமது தலைவர் பிரபாகரனால் கட்டியமைக்கப் பட்டு வழிநடாத்தப்படும் எமது இயக்கமே தமிழ் மக்களைப் பாதுகாத்து அவர்களதுஉரிமைகளைவென்றெடுப்பார்கள் என்பதை இன்று உலகத்திலுள்ள அனைத்துதமிழர்களும்நன்குஉணர்ந்துள்ளார்கள்

இவ்வாறு சரவணை இரண்டாம் வட்டாரத்தில்இடம் பெற்ற கருத்தரங்கில் விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் திரு.வீ. கஸ்ரோ உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கிற்கு திரு. கீத பொன் கல தலமைன் வகித்தார். இக் கருத்தரங்கில் தீவக அரசியல் பிரமுகர் திரு. நரேஸ் உரையாற்றுகையில் பல கசப்பானஅவவலங்களின் பின்பு நாம் ஒரு அமைதியான சூழ்நிலையில் கூடியிருக்கின்றோம் வீரமரணமடைந்த போராளிகளின்தியாகத்தினாலும் மரனித்த மக்களினதும் தியாகங்களினாலுமே இச் சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். எமது மக்களிற்கு நிரந்தர அமைதி ஏற்படும் வரை எமது போராட்டம் தொடரும் என்றார்.

கருத்தரங்கில் அப்பகுதி மக்களால் வினாவப்பட்ட கேள்விகளுக்கு விடுதலைப் புலிகள் பதிலளித்தனர் மேலும் இப்பகுதி மக்களின் காணிகளைஅரசு வீடமைப்புத்திட்டத்திற்காக சுவீகரித்த போதும் இதுவரை வீடுகள் கட்டி கொடுக்கப் படவுமில்லை. அக் காணிகலை திரும்பவும் ஒப்படைக்கவில்லை. நஷ்டஈடும் வழங்கப் படவுமில்லை யென தெரிவிக்கப்பட்டது (15)

## தமிழீழ ஆய்வு நிறுவனம்

# மகாநாடு

**ஆய்வும், அபிவிருத்தியும்**
**தமிழீழ அடிமட்ட பூர்வாங்க சேவை**
**பங்குனி 24, 25 1990 களில்**

தமிழீழத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு வழிவகைகளை கண்டறிவது இம்மகாநாட்டின் அடிப்படை நோக்கம் ஆகும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நிலவுகின்ற உண்மையான அரசியல் நிலை, கலாசார வரலாற்று விடையங்களை கருத்தில் கொண்டு உறுதியான, அர்த்தமுள்ள அபிவிருத்தியை ஏற்படுத்த நவீன விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் எப்படி பயன்படுத்த வேண்டும் என இம்மகாநாடு ஆராயும்.

அடித்தள பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டுள்ள திட்டமிடலாளர்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள்' ஆய்வாளர்கள் ஆகியோர் பங்குவற்றுவதை கவருவதாக மகாநாடு அமையும். மகாநாடு அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை எளிதில் கிரகிக்கக் கூடிய புத்திஜீவிகளையும், கல்விமான்களையும் ஒன்றுசேர்த்து தமிழ் பிரதேசங்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், உறுதியான அரசியலைகொண்டு

**யாழ் நகரில் இன்றைய சினிமா**

80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஶ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

வின்சர் - யாழ்
10.30 2 30 4.30 7 00
மோகன் - சுகாஷினி
**நெஞ்சத்தைக் கிள்ளாதே**

### கோழிச்குஞ்சு விநியோகம்

Prima Lohman சிவப்பு வெள்ளை ்பட்டுக் குஞ்சுகள் புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet Hylie Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

NALLUR FARM CENTRE, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (B/189)


# பிரஜாவுரிமை பெற்ற மக்களுக்கு வவுனியாவில் காணி வழங்கல்

(வவுனியா)

காணிப் பங்கீட்டில் புதிய முறைசள் வவுனியா மாவட்டத்தில் கடைப்பிடிக்க இருப்பதாக நம்பசரமாகத் தெரியவந்துள்ளது. இப்புதியமுறைகள் பற்றித் தெரியவந்துள்ளதாவது,

கடந்த காலங்களில் வவுனியாப் பிரதேசத்தில் அடாத்தான முறையில் பி௰வரும் மூறையற்ற காணிகள் மக்களால் பிடித்துவைக்கப்பட்டுள்ளன. அவை;

விவசாயம் செய்யாமல் இருக்கும் மத்திய வகுப்புக் காணிகள்

கடந்தகாலங்களில் உணவு உற்டத்திக்காக எடுக்கப்பட்டுத் தரிசாகவிடப்பட்டவை

அனுமதியின்றி வெட்டி காலக்கிரமத்தில் கைவிடப்பட்டவை

அனுமதியின்றிப் பிடிக்கப்பட்டு கைவிடப்பட்டவை.

இவ்வாறான காணிகள் பலவற்றில் கடந்தகாலங்களில் வன்முறையால் இடம் பெயர்ந்த பெரும் தொகையான இந்திய மக்கள் குடியேறினார்கள். இவ்வாறான குடியேற்றங்களின் பட்டியல் கச்சேரி, காணி அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளது. அப்போது அவர்களிற்கு அவர்களால் பிடிக்கப்பட்ட காணிகள் பிரஜாவுரிமை இல்லாத காரணத்தால் கொடுக்கப்பட முடியவில்லை. ஆனால் புதிதாகப் பிரஜாவுரிமை பெற விண்ணப்பித்தவர்கள் யாவரும் இக்காணிகளைப் பெற உரித்துடையவர்கள் ஆவர்.

இவர்கள் பிடித்த காணிகளை இவர்கட்கே கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

## மீண்டும் தச்சுத்தொழில் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தச்சுத்தொழிற் சாலைகளில் மீண்டும் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

பதினாறு வயதுக்கும் இருபத்திரண்டு வயதுக்கும் இடைப்பட்டவர்கள். (எட்டாம் வகுப்பு சித்தி) தமது விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக சிறுகைத்தொழில் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தாண்டு புதுவிழா

எதிர்வரும் சிங்சள - இந்து புதுவருடத்தை நாடுதோறும் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் நோக்கமே இதற்குக் காரணம் எனச் சொல்லப்பட்டது.

இதற்கு முன்னோடியாக ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், அரசசார் நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றுடன் சேர்ந்து இவ்விழாக்கள் நடைபெறும் எனத் தெரியவருகின்றது (31)


ஆதிகாலம் தொட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கை தேர்ந்த வைத்தியர்.

**டாக்டர் டோமினிக்**

(சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

சென். பற்றிக்ஸ் வீதி,

யாழ்ப்பணம்.

(B/292)

வட பகுதி கடற்றொழிலாளருக்கு மலிவு விலையில் கீழ் கண்ட பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

1 1/2 மி.மீ, 2.மி மீ நைலோன், கொர்லோன் நூல் வகைகளை சகாய விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்,

**சென். அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி,

யாழ்ப்பாணம்.

(B- 290)

பூநகரி ப. நோ. கூ. சங்கத்திற்கு அரிசி ஆலை, களஞ்சியம் மற்றும் ஏனைய பகுதியிலும் வேலை செய்ய தொழிலாளர்கள் தேவை.

31. 3. 90க்கு முன் நேரில் ... ம்.

தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

## பூநகரி ப.நோ.கூ. சங்கம்

(B/287)


### பத்திரிகையாளருக்குமரணதண்டனை

# பிரிட்டிஷ் கடும் ஆட்சேபம்

(பாக்தாத்)

மரண தண்டனை விதித்த லண்டன் பத்திரிகையாளருக்கு ஈராக் தண்டனையை நேற்றுக்காலை நிறைவேற்றியுள்ளது. பாக்தாத் அருகே உள்ள ஒரு இராணுவ வளாகத்தில் நடந்த வெடி விபத்தைப் பற்றி செய்தி சேகரிக்க முயன்ற பசாத் என்ற பத்திரிகையாளரே மரண தண்டனைக்கு உள்ளானவர். இவரது சடலம் பிரிட்டிஷ் தூதரகத்தில் ஈரானிய செய்தித்துறை அமைச்சரினால் ஒப்படைக்கப்பட்டது.

இந்நடவடிக்கை பற்றிக் குறிப்பிடும்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரி மார்கிரட் தட்சர், இந்நடவடிக்கையானது காட்டுமிராண்டித்தனமானது என்று கூறினார். ஐரோப்பிய சமூக நாடுகளும், ஐக்கிய நாடுகள் தாபனமும் கருத்துத் தெரிவிக்கும் முன்பாக ஈராக் இத்தண்டனையை நிறைவேற்றி விட்டதாகவும் அவர் கூறினார். இத்தண்டனை நிறைவேற்றும் முன்பாக இவர் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டால் இரு நாடுகளின் இராஜரீக உறவும் முறிவடையும் என்றும் ஈராக்கை எச்சரித்திருந்தார்கள். அதையும் மீறி ஈராக் மரணதண்டனையை நிறைவேற்றியிருக்கிறது. இது பற்றிக் குறிப்பிட்ட ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேன் ''பாக்தாத் வெளிநாடுகளின் நெருக்குதலுக்கு ஒருபோதும் அடிபணியாது'' என்று குறிப்பிட்டார்.

## சிரமதானம்

(கிளிநொச்சி)

கனகபுரம் அரசினர் கனிஷ்ட வித்தியாலய விளையாட்டு மைதானம் சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கமும் மேற்படி பாடசாலை மாணவர்களும் இணைந்து விளையாட்டு மைதானத்தை துப்பரவு செய்தனர்.

சிரமதானத்தில் ஈடுபட்டவர்களுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தாகசாந்தி வழங்கியது. (49)


தமிழீழத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு வழிவகைகளை கண்டறிவது இம்மகாநாட்டின் அடிப்படை நோக்கம் ஆகும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நிலவுகின்ற உண்மையான அரசியல் நிலை, கலாசார வரலாற்று விடையங்களை கருத்தில் கொண்டு உறுதியான, அர்த்தமுள்ள அபிவிருத்தியை ஏற்படுத்த நவீன விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் எப்படி பயன்படுத்த வேண்டும் என இம்மகாநாடு ஆராயும்.

அடித்தள பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டுள்ள திட்டமிடலாளர்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள்' ஆய்வாளர்கள் ஆகியோர் பங்குவற்றுவதை கவருவதாக மகாநாடு அமையும். மகாநாடு அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை எளிதில் கிரகிக்கக் கூடிய புத்திஜீவிகளையும், கல்விமான்களையும் ஒன்றுசேர்த்து தமிழ் பிரதேசங்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், உறுதியான அரசியலைகொண்டு வரவும், அர்த்தமுள்ள, பிரயோசனமான திட்டங்களை உருவாக்கும்.

**சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகள்**

- ★ சமூக அமிவிருத்தி, சிறிய கைத்தொழில்களும், குடிசைக் கைத்தொழில்களும்,
- ★ சமூக அபிவிருத்தி - விவசாயம்
- ★ சமூக அபிவிருத்தி - மீன் பிடி
- ★ சமூக அபிவிருத்தி - சக்தி பிறப்பிடங்கள்
- ★ சமூக அபிவிருத்தி - சுகாதாரம்

மேலக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**Programme Secretary**
**ROOT**
**8, Herm House,**
**Clepane Road,**
**London**
**NI-2TP**
**Tel: (01) 359 2834**

(B.300)

# உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக் குறைந்தது 4000 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொதுமக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக் கூடிய யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவைப்படுகின்றது.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**பிரதிமுகாமையாளர்**

**இலங்கை மின்சாரசபை**

இல. 52, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
1990 - 03 - 15

(B/299)

★ கார்த்திக் ★ குஷ்பு

**வருஷம் 16**

(கலர்)

**ஸ்ரீதர் (யாழ்)**

10-30, 2. 30, 6. 30

கமலஹாசன் -- சுஜாதா

**அவள் ஒரு தொடர்கதை**

**வின்சர் - யாழ்**

10.30 2 30 4.30 7 00

மோகன் - சுகாஷினி

**நெஞ்சத்தைக் கிள்ளாதே**


## புத்தக கண்காட்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன்சாவச்சேரி மகளிர்வித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ இராமகிருஸ்ண விவேகானந்தபுத்தகக் கண்காட்சியைசாவகச்சேரி கொத்தணி அதிபர். திரு.கே. பாலச்சந்திரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் வைபவத்திற்குசாவகச்சேரி மகளிர் வித்தியாலய அதிபர். திருமதி என். தாமோதரம்பிள்ளை தலைமை தாங்கினார் (25)

## ஆணையாளர் விஜயம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி அபிவிருத்தி ஆணையாளர் திரு. நித்தியராஜ் நேற்று முன் தினம் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு விஜயம் செய்தார்.

## விடுதலையானோருக்கு விடுதலைப் புலிகள் பணஉதவி

(அச்சுவேலி)

தமிழ் தேசிய இராணுவத்தில் அங்கம்வகித்து பின்னர் விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்த 49 பேர் அச்சுவேலியில் வைத்து விடுதலைப் புலிகளினால் பொது மக்கள் முன்னிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

49 இளைஞர்களையும் உறவினர்கள் பெற்றோர் கையொப்பமிட்டு பொறுப்பேற்றுக் கொண்டனர் இதில் 15 இளைஞர்களுக்கு போக்குவரத்து செலவுக்காகப் பண உதவியும் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டது.

# நாட்டின் ஒற்றுமையும் உறுதிப்பாட்டையும் பாதுகாக்க கொர்பச்சேவ் உறுதி

(மொஸ்கோ)

''தீவிர சீர்திருத்தங்களை விரைவுபடுத்தப் போவதாகவும் நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்க தனது புதிய அதிகாரங்களை பயன்படுத்தப் போவதாகவும்'' சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சோவியத் யூனியனில் முதலாவது நிர்வாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கொர்பச்சேவ் பாராளுமன்ற கூட்டத்தில் தெரிவித்தார். கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தலின் முடிவு வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது. மக்களின் பேராளர் காங்கிரஸ் இவரைத் தேர்ந்தெடுத்தது.

இவருக்கு ஆதரவாக 1222 வாக்குகள் கிடைத்தன. எதிராக 495 வாக்குகள் இடப்பட்டன. இவ் வாக்கெடுப்பில் 350 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

**வாக்குகளின் விபரம்**

மொத்த வாக்குகளில் 60 வீதத்தினர் ஆதரவு அளித்திருக்கிறார்கள். இதனை ஜனாதிபதி கொர்பச்சேவ் ஏற்றுக்கொண்டு நம்பிக்கை வாக்குகளாக எடுத்துக்கொள்ள முடியும். ஆனாலும் எதிர்த்தும், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலும் பலர் இருந்ததால் ஜனாதிபதி அதிகாரங்களை ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்த பின்னரே செயல்படுத்துவார் என அதிகாரிகள் கூறினர். இருப்பினும் பாராளுமன்றம் கொர்பச்சேவின் எண்ணத்துக்கு ஆதரவு அளித்திருக்கிறது. இவ்வாறு இவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்ததன் மூலம் கம்யூனிஸ் கட்சித் தலைவராகவும் இருக்க அனுமதித்திருக்கிறது.

**புதிய நடவடிக்கைகள்**

மேலும் அங்கு உரையாற்றிய ஜனாதிபதி கொர்பச்சேவ் தீவிர பொருளாதார மாற்றங்கள் வரும் என்றும் இதனால் விலைகள் உயரலாம் என்றும் எச்சரித்தார். அதேவேளை சோவியத் யூனியனின் இராணுவத்தை முழு அளவில் சீரமைக்க வேண்டும் என்றார்.

மொஸ்கோவுக்கும் அதனுடன் சேர்ந்த குடியரசுகளுக்கும் இடையே உறவை சீரமைக்க புதிய ஒப்பந்தம் ஏற்படும் என்றும் எதேச்சதிகார அமைப்பு ஜனநாயக பூர்வ அமைப்பாக மாற்றப்படும் என்றும் கூறுனர். சில குடியரசுகளை வேண்டுமெனில் ஓரளவு சுதந்திரமாக செயற்படும் உறவு நிலையில் வைத்துக் கொள்ளலாம் என்றும் கொர்பச்சேவ் கூறினார்.

**எதிர்க்கட்சிகள் அச்சம்**

அதே வேளை எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியின் புதிய பதவி தன்னிச்சையான அதிகாரம் நிறைந்தது என்று கவலை தெரிவித்துள்ளனர். இதனால் போராட்டங்கள் நசுக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டனர்.

## பெற்ற குழந்தையை வெட்டிக்கொன்ற தாய்

(கண்டி)

பிறந்த தனது ஒரு நாள் குழந்தையை மன்னாக் கத்தியால் வெட்டிக் கொலை செய்த தாய்க்கு கண்டி மேல் நீதிபதி திரு. ஆர். பி. ரணராஜா ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறையும், ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

## கண்டியில் சட்டவிரோத சிகரெட் தொழிற்சாலை

(கண்டி)

சிகரெட்டுகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று கண்டியில் முறத்தலாவ என்ற இடத்தில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொழும்லுள்ள மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கோஷ்டி ஒன்று கண்டியிலுள்ள மதுவரி உத்தியோகத்தரின் உதவியுடன் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது மேற்படி தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டது. உள்ளூர்த் தயாரிப்பான இயந்திரத்தின் உதவியால், இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனம் தயாரிக்கும் சிகரெட் வகைகளைப் போல் இவர்களும் தயாரிக்கிறார்களாம்.

சுருட்டுப் பெட்டிகளில் சிகரெட் பெட்டிகளை வைத்து சுருட்டு என்ற போர்வையில் பிற ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது,

சுமார் இரண்டரை வருடங்களாகச் செயற்பட்டு வரும் இத் தொழிற் சாலையின் ஒழுங்கமைப்பு நல்ல முறையில் இருந்ததாக பிரதி மதுவரி ஆணையாளர் தெரிவித்துள்ளார்?

பதப்படுத்தப்பட்ட புகையிலை, சிகரெட் சுற்றும் கடதாசிகள் ஆகியன தொழிற்சாலையில் கணிசமான அளவு காணப்பட்டன. 2,000 சிகரெட் அட்டைப் பெட்டிகளும் அங்கிருந்ததாம்.

சிகரெட் தயாரிக்கும் இயந்திரம் மதுவரித் திணைக்களங்களின் பாதுகாப்பில் தற்போது உள்ளது.

## ஓய்வு பெற்றார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தபால் நிலையத்தில் பிரதம தரம்பிரிப்பாளராகப் பணியாற்றிய திரு. முருகேசு தங்கராஜா தனது 55 ஆவது வயதில் 35 வருடசேவையைப் பூர்த்தி செய்து கடந்த மாதம் முதல் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (25)

## சீல் பொறிக்காவிடின் தகுந்த நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் புதிதாக வருகிற எண்ணை அளவுகள் அனைத்தும் பாதுகாப்புச் சட்டத்துக்கு முற்று முரணாகவும், மிகக்குறைவாகவும் இருக்கிறது. நிறுவைகள், அளவைகள் திணைக்கள அனுமதி பெற்றவர்கள் மாத்திரம் முத்திரை இட்ட கருவிகளை வாங்கலாம். அரசாங்க முத்திரை (சீல்) இட்ட திரவ அளவைகள் அளக்கும் கருவிகளை வியாபாரிகள் நன்கு பார்வையிட்டுக் கொள்வனவு செய்ய வேண்டும். இக்கருவிகள்

## திருமலைகோட்டை சிங்கள அகதிகள்

## நேபாளத்தில் வேலை நிறுத்தம் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு மக்கள் செவிசாய்ப்பு

(காத்மண்டு)

பல கட்சி ஜனநாயக ஆட்சியை ஹிமலாய இராச்சியமான நேபாளத்தில் நிறுவ ஆதரவாக வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளும்படி, தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோள் ஒன்றைத் தொடர்ந்து, கடந்த புதன்று நேபாளத்தில் முக்கிய நகரங்களிலெல்லாம் கடைகள் மூடப்பட்டிருந்தன.

காத்மண்டுவில் தடை செய்யப்பட்ட கட்சிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகைச் சாதனங்களுடன் நகரத்தில் ரோந்து புரிந்தனர்.

வேலை நிறுத்தம், கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளால் தூண்டப்பட்டதென்றும், இதற்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்று அரசாங்கம் மக்களை எச்சரித்திருந்தும், ஒரு சில பார்மஸிகளையும், ஆடம்பரப் பொருட்களையும் விற்கும் கடைகளைத் தவிர மற்ற வியாபார நிலையங்களெல்லாம் மூடப்பட்டிருந்தன.

தடை விதிக்கப்பட்ட கட்சிகளின் ஜனநாயகத்துக்கான ஒரு மாதகாலப் போராட்டத்தில் இது மூன்றாவது வேலை

போது பொலிஸருக்கும் பொதுமக்களுக்குமிடையில் தெருச்சண்டைகளும், மோதல்களும் ஏற்பட்டன.

நேபாளத்தில் ஒரு கட்சி ஆட்சிக்கெதிரான இப்போராட்டத்தின் போது கடந்த மூன்று நாட்களில் ஒரு பொலிஸ் உட்பட 12 பேர் இறந்துள்ளார்கள். அரசாங்கத் தரப்புச் செய்திகளின்படி கடந்த ஒரு பாதகாலத்தில் 3,000 பேர்வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்களாம்.

சென்ற செவ்வாய் வரை 991 பேர் தான் தடுப்புக்காவலில் இருப்பதாக அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

மனித உரிமை நிறுவனங்களும், நேபாள காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தரப்புச் செய்திகளின்படி இதுவரை சுமார் 8,000 பேர்வரை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்களாம்.

## அரச ஊழியர்களின் இந்த நிலை என்று மாறுமோ?

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச ஊழியர்கள் சுமார் 1000பேர் கடந்த வன்செயல் காலங்களில் வேலையினை இழந்தனர். இதில் ஒருசில பேருக்கே மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது

இது பற்றி பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்ட 25-04-1988 திகதிய 14/88 சுற்றுநிருபம் சகல ஊழியருக்கும் வேலை வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. இது பற்றி தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையில் வேலை இழந்த ஊழியர்கள் மீண்டும் வேலை கோரி தலைமைக் காரியாலத்திடம் தொடர்பு கொண்டும் உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. அரசு இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்குமா? (29)

## வடமாராட்சியில் நிவாரணப் பணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணம் எதிர்வரும் (17-3-90) சனிக்கிழமை (18-3-90) ஞாயிற்றுக்கிழமைகளில் வல்வெட்டித்துறை வடக்கு, புலோலி கிழக்கு மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

17ஆம் திகதி வல்வெட்டித்துறை வடக்கைச் சேர்ந்த 1007 குடும்பங்களுக்கு 1000 ரூபா நிவாரணமும் 10 குடும்பங்களுக்கு 2000 ரூபா நிவாரணமும் வழங்கப்படவுள்ளன.

18ஆம் திகதி புலோலி கிழக்கைச் சேர்ந்த 972 குடும்பங்களுக்கு 1000 ரூபா நிவாரணமும், 5 குடும்பங்களுக்கு 2000 ரூபா நிவாரணமும் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்தும் வங்கி விடுமுறை நாட்களில் நிவாரணப் பணம் மக்களுக்கு வழங்கப்படுமென வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் தெரிவித்தார். (25)

## கட்சி தலைமை யாருக்கு? சிறிமா - அனுரா போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும், மகனான அனுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையில் சர்ச்சைகள் எழுந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாகவே இப்பிரச்சினை எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு அடுத்ததாக தலைமைப் பொறுப்பு தனக்குத்தான் என எண்ணியிருந்த அனுராபண்டாரநாயக்காவிற்கு தாயார் வெளியில் இருந்து மறைந்த விஜய குமாரதுங்காவின் மனைவியான மகள் சந்திரிகாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக்க முயற்சிகள் செய்வதாக கிடைத்த செய்தியின் பின்னரே தாய்க்கும் மகனுக்கும் இடையில் பிரச்சினை உருவாயுள்ளதாகத் தெரியவருகின்றது.

## கமத்தொழில் அதிகாரிகள் நெடுந்தீவுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பலகாலத்தின் பின்பு நெடுந்தீவு விவசாயிகளின் குறைவுகளை கண்டறியும் பொருட்டு அங்கு விஜயம் செய்த கமத்தொழில் திணைக்கள உயர் அதிகாரிகள் நெடுந்தீவு மக்களுக்கு நியாயமான வாடகையில் சேவையாற்றுவதற்கென ஒரு உழவியந்திரத்தை வழங்கியுள்ளனர்

... றுவது பற்றியும் ஆராயப்பட்டது

நெடுந்தீவு மக்கள் தமது மூதாதயர் நாட்டிவைத்த பனை தென்னையில் இருந்தே பயன் பெற்று வருகின்றனர்.

புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு புதியஇன மரங்கள் நாட்டுவது பற்றியும் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்

...நாளாம்.

## ஓய்வு பெற்றார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தபால் நிலையத்தில் பிரதம தரம்பிரிப்பாளராகப் பணியாற்றிய திரு. முருகேசு தங்கராஜா தனது 55 ஆவது வயதில் 35 வருடசேவையைப் பூர்த்தி செய்து கடந்த மாதம் முதல் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (25)

...திரம் மதுவரித் திணைக்களங்களின் பாதுகாப்பில் தற்போது உள்ளது.

...ஒன்றை மேற்கொள்ளும்படி, தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டு...

...கடைகள் மூடப்பட்டிருந்தன.

காத்மண்டுவில் தடை செய்யப்பட்ட கட்சிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகைச் சாதனங்களுடன் நகரத்தில் ரோந்து புரிந்தனர்.

வேலை நிறுத்தம், கம்யூனிஸ்ட்தீவிரவாதிகளால் தூண்டப்பட்டதென்றும், இதற்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்று அரசாங்கம் மக்களை எச்சரித்திருந்தும், ஒரு சில பார்மஸிகளையும், ஆடம்பரப் பொருட்களையும் விற்கும் கடைகளைத் தவிர மற்ற வியாபார நிலையங்களெல்லாம் மூடப்பட்டிருந்தன.

தடை விதிக்கப்பட்ட கட்சிகளின் ஜனநாயகத்துக்கான ஒரு மாதகாலப் போராட்டத்தில் இது மூன்றாவது வேலை நிறுத்தமாகும். காத்மண்டு பள்ளத்தாக்கு நகரான பக்தாப்பூரிலும், இந்தியாவின் எல்லைப்புறமாக அமைந்த கிராமங்களிலும் வேலை நிறுத்தத்தின போது நிகழ்ந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களின் ...மேற்கொண்டனர்.

நேபாளத்தில் ஒரு கட்சி ஆட்சிக்கெதிரான இப்போராட்டத்தின் போது கடந்த மூன்று நாட்களில் ஒரு பொலிஸ் உட்பட 12 பேர் இறந்துள்ளார்கள். அரசாங்கத் தரப்புச் செய்திகளின் படி கடந்த ஒரு மாதகாலத்தில் 3,000 பேர்வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்களாம்.

சென்ற செவ்வாய் வரை 991 பேர் தான் தடுப்புக்காவலில் இருப்பதாக அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

மனித உரிமை நிறுவனங்களும், நேபாள காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தரப்புச் செய்திகளின் படி இதுவரை சுமார் 8,000 பேர்வரை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்களாம்.

அந்நிய நாடுகளின் முதலீட்டைக் கொண்டு பொருளாதாரத்தை கட்டி வளர்க்கும் நேபாளத்தில் தலா வீத வருமானம் 160 டாலர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாகவே இப் பிரச்சினை எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு அடுத்த ... செய்வதாக கிடைத்த செய்தியின் பின்னரே தாய்க்கும் மகனுக்கும் இடையில் பிரச்சினை உருவாயுள்ளதாகத் தெரியவருகின்றது.

# சீல் பொறிக்காவிடின் தகுந்த நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் புதிதாக வருகிற எண்ணை அளவுகள் அனைத்தும் பாதுகாப்புச் சட்டத்துக்கு முற்று முரணாகவும், மிகக்குறைவாகவும் இருக்கிறது. நிறுவைகள், அளவைகள் திணைக்கள அனுமதி பெற்றவர்கள் மாத்திரம் முத்திரை இட்ட கருவிகளை வாங்கலாம். அரசாங்க முத்திரை (சீல்) இட்ட திரவ அளவைகள் அளக்கும் கருவிகளை வியாபாரிகள் நன்கு பார்வையிட்டுக் கொள்வனவு செய்ய வேண்டும். இக்கருவிகள் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அனேகமான இடங்களில் விற்கப்படுகிறது. சகலரும் விற்பனை செய்வதைவேண்டவேண்டாம் என்றும், அரச அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளிடம் மட்டுமே வேண்டும்படி யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

மெட்ரிக் நிறுவைகள், மெட்ரிக் திரவக் கொள்ளளவு அளவைகள் அனைத்திற்கும் தாமதியாது உடன் அரச முத்திரை இடப்பட்ட சீல் பொறிக்கத் தவறும் பட்சத்தில் திணைக்கள மூலம் தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கத் தயங்க மாட்டோம் என்பதையும் திணைக்கள அதிகாரி எமது நிருபருக்கு அறியத்தருகின்றார். (24)

# கமத்தொழில் அதிகாரிகள் நெடுந்தீவுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பலகாலத்தின் பின்பு நெடுந்தீவு விவசாயிகளின் குறைவுகளை கண்டறியும் பொருட்டு அங்கு விஜயம் செய்த கமத்தொழில் திணைக்கள உயர் அதிகாரிகள் நெடுந்தீவு மக்களுக்கு நியாயமான வாடகையில் சேவையாற்றுவதற்கென ஒரு உழயந்திரத்தை வழங்கி உள்ளனர்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் நெடுந்தீவு மக்களின் விவசாய கூட்டுறவு பற்றியும் விவசாயிகள் சங்கம் ஒன்று அமைத்து அதன் மூலமாகசெயலாற்றுவது பற்றியும் ஆராயப்பட்டது.

நெடுந்தீவு மக்கள் தமது மூதாதயர் நாட்டி வைத்த பனை தென்னையில் இருந்தே பயன் பெற்று வருகின்றனர்.

புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு புதியஇன மரங்கள் நாட்டுவது பற்றியும் இக் கலந்துரையாடலில் ஆராயப் பட்டதாக விவசாய திணைக்கள ஆணையாளர் தெரிவிக்கிறார். (லோ)

# போட்டி முடிவுகள்

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கடந்த 13-3-90 செவ்வாய்க்கிழமை பரந்தன் இந்து மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கல்வி அதிகாரி திரு. பொன். சபாபதி தலைமையில் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம் பெற்றது.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரிகள் திரு. எஸ். தர்மரட்ணம், திரு. எஸ். கமலநாதன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இப்போட்டியிற் பங்குபற்றி முதலாம் இடம் பெற்ற பாடசாலைகளும், அணிகளின் தரமும்.

13 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் ஆண்கள் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம், பெண்கள் கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

17 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் ஆண்கள் கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயம், பெண்கள் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.

19 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் ஆண்கள் கிளிநொச்சி தர்மபுரம மகாவித்தியாலயம் பெண்கள் கிளிநொச்சி கனிஷ்ர வித்தியாலயம்.

# திருமலைகோட்டை சிங்கள அகதிகள்

## மீளக் குடியமர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

திருக்கோணமலை அகதி முகாமில் இருக்கும் சிங்கள மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

திருகோணமலையில் கோணேசர் கோயிலுக்குச் செல்லும் பிரடரிக் கோட்டையில் தான் இப்பொழுது சிங்கள மக்கள் அகதிகளாகத் தங்கியிருக்கின்றனர். இந்தக் கோட்டைக்குள் தான் கச்சேரி மற்றும் அரச அலுவலகங்களும் பொலிஸ் நிலையம், இராணுவமுகாமும் அமைந்துள்ளன.

இந்தக்கோட்டையிலிருந்து சிங்கள அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கையாகவே சிங்கள அகதிகளை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையை அரசு எடுத்து வருவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருக்கிறார்.

# பிறப்புச் சான்றிதழ் பெற செயலகத்திற்கு அலைச்சல்

(யாழ்ப்பணம்)

யாழ். செயலகத்தில் உள்ள பிறப்பு இறப்பு பகுதியில் தினமும் மக்கள் அலைந்து திரிகின்றனர். இங்குள்ள போட்டோஸ்ரற் யந்திரங்கள் பழுதினால் இந்த வேலைகளைத் துரிதகதியில் செய்யமுடியாதுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இதேசமயம் பிறப்பு இறப்பு பத்திரங்களை எழுதிக் கொடுப்பதற்கு என்று சில ஊழியர்கள் அண்மைக்காலங்களில் இங்கு நியமிக்கப்பட்டனர்.

ஆனால் இவர்கள் பதிவுப் பத்திரங்களைப் பார்த்து எழுதுவதில் தவறுகள் விடுகின்றனர். அத்துடன் அழகில்லாமலும், அவசரத்திலும் எழுதி தமிழ்ப் பிழைகள் ஏற்படுகின்றன.

அண்மையில் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு சென்றவர்கள் சிலரின் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களில் எழுத்துப் பிழைகள் இருப்பதாக அப் பரீட்சையை நடாத்திய அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிறப்பு இறப்புச் சாட்சிப் பத்திரங்களை அங்கு செல்வாக்கைப் பிரயோகித்து சிலர் பெற்றுக் கொள்கிறார்கள் என்றும் இங்கு வரும் பொது மக்களில் சிலர் ஈழநாதத்துக்குத் தெரிவித்தனர்.

யாழ், புதிய அரசாங்க அதிபர் இந்தப் பகுதியின் கருமங்களை நேர்மையாகவும், துரிதமாகவும் நடைபெற ஆவன செய்யவேண்டும் என்றும் பொதுமக்கள் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

# கிராம சேவகர்களைத் தேடி மக்கள் அலைந்து திரிகிறார்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில கிராம சேவகர்கள் தத்தமது அலுவலகங்களுக்கு கடமைக்கு வருவதில்லை என்று பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலமை வழமைக்குத் திரும்பியுள்ளபோதிலும் இவர்கள் தமது அலுவலகங்களுக்கு கடமைக்கு வருவதில்லை இதனால் தமது முக்கிய அலுவல்களை செய்ய முடியாது. பொது மக்கள் இந்த அலுவலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

இதேபோல சில உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் குறிப்பிட்ட சில பணிகளைச் செய்யும் லிகிதர்கள் தாமதமாக வருவதாகவும், சில சமயம் நேரத்துடன் சென்றுவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றால் புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணம், அடையாள அட்டை, உணவு முத்திரை, சமூக சேவை உதவிப்பணம் போன்ற வேலைகளுக்காக மக்கள் இவர்களிடம் அலைகின்றனர்.

திருமலையில்

# பொலிஸ் அதிபர் அலுவலகத்தில் பணக் கொடுக்கல் வாங்கல்

(திருகோணமலை)

இலங்கை வங்கி, திருகோணமலைக் கிளையில், சமீபத்தில் நடந்த கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து, பணக் கொடுக்கல் வாங்கல் டொக்யாட் றோட்டில்உள்ள பிரதிப் பொலிஸ் மாஅதிபர் காரியாலயத்தில் தற்சமயம் நடைபெறுகிறதாம்.

காசோலைகள் மாத்திரம் தான் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் திருகோணமலை பிரதிப் பொலிஸ் மாஅதிபர் காரியாலயத்தில் நடைபெறும் என்று வங்கி முகாமையாளர் வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

மீளக்குடியமரலில்

# சின்னத்தம்பனை மக்களுககு மாபெரும் நெருக்கடிகள்

(வவுனியா)

கடந்தகால வன்செயல்களினால் சின்னத்தம்பனை என்ற இடத்தில் இருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மீண்டும் வெளியேறிய இடங்களுக்குச்சென்று குடியேறுவதற்குப் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். மீளக்குடியமரலில் தாம் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பலவற்றை இன்று 33 சின்னத்தம்பனை வாசிகள் ''ஈழநாதம்'' நிருபருக்குத் தெரிவித்தனர். இவர்கள் எமது நிருபருக்குத் தெரிவித்ததாவது.

நாம் முன்பு குடியேறி இருந்த சின்னத்தம்பனையில் தமிழ் மக்களின் ஒரு கொட்டில் கூட மிஞ்சவில்லை. எமக்கு மீளக்குடியமருவதற்கு 15,000 ரூபா தர வாக்குறுதி அளிக்கப்பட்டபோதும் ஒரு சதம் கூடத் தரப்படவில்லை. நாம் வீடு கட்டக் காசு ... படும் எனச் சொல்லப்... கின்றது. காசில்லாமல் ... படி வீடு கட்டத் தொடங்குவது?

கடந்த மூன்று ஆண்டுகட்கு முன்னர் ஏறக்குறைய 250 வீடுகளை அமைக்க நிதியுதவி வழங்கும் முகமாக புனர்வாழ்வு, புனரமைப்புப்பகுதி குடும்ப அட்டைகளை வழங்கியபோதும் இதுவரை ஒரு வீடாவது கட்டித்தரவில்லை.

இந்நிலையில் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்பு சின்னத்தம்பனையில் எம்மைக் குடியேறுமாறு அரச அதிகாரிகள் கூறுகிறார்கள் எப்படிக் குடியேறுவது? அவர்கள் மேலும் கூறியதாவது;

நாம் முன்பு குடியிருந்த இடத்தில் இருந்த பாடசாலையைக் காண முடியவில்லை. இருந்த ஒரேயொரு குழாய்க் கிணறும் பழுதாகி விட்டது. நாம் குடியேறுவதற்குப் பின் வரும் உதவிகள் உடனடியாகத் தேவை.

எல்லைப்புறப் பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப் பொலிசார் தேவை.

விவசாயிகளிடம் எடுத்த துப்பாக்கிகளைத் தி... த் தரவேண்டும்.

... சேவை ஒழுங்கு ...தப்படல் வேண்டும்.

...டசாலை மீண்டும் ... முடிக்கப்பட வேண்டும்.

சின்னத்தம்பனைப் பிரதான வீதியில் மிகுதியாய் உள்ள ஒன்றரை மைல் தூரமுள்ள வீதியைத் திருத்தித் தரவேண்டும்.

இரண்டு குழாய்க்கிணறுகள் வெட்டித் தரப்பட வேண்டும்.

இவ்வாறு சின்னத்தம்பனை வாசிகள் தெரிவித்தனர். (31)

## விவசாய அபிவிருத்தி நிதி பெற முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறுநீர்ப்பாசன ஊக்குவிப்புக்கும் உணவுப்பயிர் அபிவிருத்திக்கும் என தொண்ணூறாம் ஆண்டுக்கு போதுமான நிதியை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு ஆவன நடவடிக்கை செய்யப்பட்டு வருவதாக விவசாய திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் இவ்வுதவியை எமக்கு அளிப்பதற்கு காலம் கடத்தப்பட்டு வருவதாகவும் தாம் பல வழிகளிலும் முயற்சி செய்து இவ்வுதவி நிதியை பெறுவதற்கு பெரு முயற்சி செய்வதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார். (லோ)

NEW MASTER
INSTITUTE
B.M.C. LANE, JAFFNA.

- நந்தகுமார்
- மக்ஸி
- பாபு
- நாகநாதன்
- ஐங்கரநேசன்
- சந்திரமோகன்

ஆகிய எமது வழமையான
ஆசிரியர் குழுவினால்

90 A/L DAY CLASS

பிரிவு II
ஆரம்பம் - 19. 3. 90 திங்கள்
காலை 8.00 மணி

(B/268)

## வடமராட்சிக்கு 'ஸ்கொட்' உதவி

(பருத்தித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு இலண்டன் 'ஸ்கொட்' நிறுவனம் 62,000 ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதியைக் கொண்டு சுருக்கெழுத்துக்கழகம் 2 தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் 2 ஆங்கிலத்தட்டச்சு இயந்திரங்கள், தளபாடங்களைக் கொள்வனவு செய்துள்ளது.

தற்போது வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் உடுப்பிட்டியில் தமிழ், ஆங்கிலம் தட்டச்சு சுருக்கெழுத்துப்பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றது. இப்பயிற்சி வகுப்பில் 45 பேர் 8 மாதப்பயிற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இச் சுருக்கெழுத்துக்கழகத்திற்கு உடுப்பிட்டி போறாட் நிறுவனம் இரண்டு தட்டச்சு இயந்திரங்களைக் கைம்மாற்றாகக் கொடுத்துதவியுள்ளதாகவும் கழகம் அறிவித்துள்ளது. (25)

## மதிய உணவு

(பருத்தித்துறை)

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலையின் அபிவிருத்திச்சபை தந்தி மூலம் யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

1990-இல் பாடசாலை ஆரம்பித்த பின்னர் இப்பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை மதிய உணவு வழங்கப்படவில்லை. இதனால் இப்பாடசாலை மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். (25)

## நூல் வெளியீடு

இரா சந்திரசேகரனின் ''விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்'' இரண்டாம் பதிப்பின் வெளியீடு 18ம் திகதி வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறுகின்றது. (25)

## பழ மரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி வழங்கல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைத் தொகுதி அம்பன் கமநலச் சேவை நிலையப் பகுதி பழமரச் செய்கையாளர்களினதும் உடுப்பிட்டித் தொகுதி அம்பன் கமநலச் சேவை நிலையப் பகுதி பழமரச் செய்கையாளர்களினதும் நன்மை கருதி பழமரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவியை யாழ். கமநலச் சேவைத்திணைக்களம் வழங்கியுள்ளது.

வடமராட்சிப் பகுதிக்கு பழமரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி வழங்கப்படாதமையால் இப்பகுதி பழமரச்செய்கையாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதாகவும் எனவே இப்பகுதி பழமரச்செய்கையாளர்களின் நன்மை கருதிஇப்பகுதிகளுக்கு பழமரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவியை அனுப்பிவைக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் யாழ். கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. எஸ். சிவசாமியிடம் கோரிக்கை விடுத்திருந்ததை ''ஈழநாதம்'' வாசகர்கள் அறிந்ததே.

தற்போது பருத்தித்துறை தொகுதி அம்பன் கமநலச் சேவை நிலையப் பகுதி விவசாயிகள் பாவனைக்கும் உடுப்பிட்டித்தொகுதி புலோலி கமநலச்சேவை நிலையப்பகுதி விவசாயிகள் பாவனைக்கும் என பழமரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் பழமரங்களுக்கு மருந்து தெளிக்க விரும்பும் பழமரச் செய்கையாளர்கள் அம்பன் புலோலி கமநலச்சேவை நிலையங்களுடன் தொடர்புகொள்ளுமாறு இக்கமநலச் சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். (25)

## வலி மேற்கில் நிவாரணப்பணம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் கிராமசேவையாளர் பிரிவு (J/66) க்குட்பட்ட சுமார் அறுநூற்றிநாற்பத்திரண்டு குடும்பங்களுக்கான மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 18-3-90 ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிகிளையூடாக செய்யப்படவிருப்பதாக ஈழநாதம் பத்திரிகைக்கு அறியத் தந்துள்ளார்கள். மேலும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஏனைய பிரிவுகளுக்கான கொடுப்பனவுகள் அடுத்தடுத்த கிழமைகளில் தொடர்ந்துவழங்கப்படுமென மானிப்பாய் இலங்கை வங்கி வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது. (19)

## புதிய தொல்லைகள்

(வவுனியா)

வடபகுதிக்கான தபால் ரயிலில் பிச்சைக்காரர்களின் தொல்லை அதிகரித்து உள்ளது. இதனால் ரயில் பிரயாணிகள் பலத்த கஸ்டம் அடைகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வரையே இந்தத் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. வவுனியா ரயில் நிலையத்தில் இவர்கள் இறங்கிச் சென்று விடுகிறார்கள். இவர்கள் வழமையான பிச்சைக்காரர்கள் அல்ல என்றும், இவர்கள் தொழில் ரீதியான பிச்சைக்காரர்கள் என்றும் கருதப்படுகின்றது. (31)

## துறைமுகம் அபிவிருத்தி

(வேலணை)

புங்குடுதீவில் உள்ள இறுப்பிட்டி துறைமுகம் நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டு பிரயாணிகள் இத்துறைமுக மேடைவழியாக செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (14)

VISIT

K. BATA

K. K. S. Road,

TELLIPPALAI

(B-284)

யாழ். கற்பக விற்பனை நிலையம்

திருத்த வேலைகளுக்காக இதுவரை காலமும், மூடப்பட்டு இருந்த யாழ். இல. 32 பொன்னம்பலம் வீதிக் கற்பகம் மிக விரைவில் திறந்து வைக்கப்படும் என்பதைப் பொது மக்களுக்கும் வாடிக்கையாளருக்கும் அறியத் தருகின்றோம்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை
(B/289)

நாம் கடந்த ஓடிய மாதங்களை எமது கண்ணோட்டத்தில் எடுத்துப் பார்த்தால் நிம்மதியற்ற வாழ்வு நிரந்தரமற்ற வீடுகள், நியாய தீர்வுக்கு மாறான சர்வதிகாரம். ஆனால் இன்று மக்களுக்காக இரவு பகலாய் அன்பு உபசரிப்புடனும், அன்புள்ளத்துடனும் எமது வீரவேங்கைகள் மக்கள் மத்தியில் ஒன்று சேர்ந்து வருவது மிகவும் வரவேற்கத்தக்கது. வாழ்க இவர்கள் பணி. வெல்க தமிழீழம்!

சுப்பையா அன் கோ

மின்சார லைய வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டு, வெளிநாட்டு
மதுபான விற்பனையாளர்கள்
மொத்த விற்பனையாளரும்,
சில்லறை விற்பனையாளரும்
(B-263)

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பிரிவு II
ஆரம்பம் - 19. 3. 90 திங்கள்
காலை 8.00 மணி
(B/268)

## நூல் வெளியீடு

இரா சந்திரசேகரனின் ''விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்'' இரண்டாம் பதிப்பின் வெளியீடு 18ம் திகதி வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறுகின்றது. (25)

வவுனியா வரையே இந்தத் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. வவுனியா ரயில் நிலையத்தில் இவர்கள் இறங்கிச் சென்று விடுகிறார்கள். இவர்கள் வழமையான பிச்சைக்காரர்கள் அல்ல என்றும், இவர்கள் தொழில் ரீதியான பிச்சைக்காரர்கள் என்றும் கருதப்படுகின்றது. (31)

(வேலணை)

புங்குடுதீவில் உள்ள இறுப்பிட்டி துறைமுகம் நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டு பிரயாணிகள் இத்துறைமுக மேடைவழியாக செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (14)

உள்நாட்டு, வெளிநாட்டு
மதுபான விற்பனையாளர்கள்
மொத்த விற்பனையாளரும்,
சில்லறை விற்பனையாளரும்
(B-263)


# பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுள்ளது)

❋ புடவை வகைகள் ❋ பாடசாலை உபகரணங்கள் ❋ உரம், இருமி நாசினி,
களை கொல்லிகள் ❋ கட்டிடப் பொருட்கள் ❋ எரி பொருட்கள்
❋ நெல் கொள்வனவு

❋ அரிசி ஆலை (உற்பத்திப்பகுதி, பாவனையாளர்பகுதி) ❋ கேரதீவு - சங்குப்பிட்டி (வள்ளம் - பாதைச் சேவை)
❋ ஒப்பந்த வேலைகள் ❋ கூட்டுறவு மகளிர் வேலை வாய்ப்பு

போன்ற பல துறைகளை உள்ளடக்கிய சேவை செய்து வருகின்றது.

*Duty is a Power which rises with us in the morning and go to bed with us in the evening.*

## மக்களின் தேவை

## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவை

(B.286)

### சிந்தனைக்கு

பேதமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போகவிடல்

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17 - 03 - 90

## தேவை அவதானம்

திருக்கோணமலைக் கோட்டைக்குள் கடந்த இரு வருடங்களாக சிங்கள அகதிகள் இருந்து வருகிறார்கள்.

இந்திய இராணுவம் திருக்கோணமலைக்கு வந்த பின்னர் இவர்கள் இங்கு அகதிகளாக வைக்கப்பட்டு சிறிலங்கா பொலிஸ், இராணுவப் பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த அகதி முகாம்களை மூடிவிட்டு அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு விவகார ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

"இந்த அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்குப் பல தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவர்கள் அங்கிருந்து வெளியேற மறுத்து விட்டனர். இவர்களுக்கு அரசு பல இலட்ச ரூபாய்களை செலவிட்டு வருகிறது. இது மட்டுமன்றி தென்பகுதி ஜே. வி. பி, தீவிரவாதிகளும் பாதுகாப்புப்படையினரிடமிருந்து தப்புவதற்காக அகதிகள் என்ற போர்வையில் அங்கு தஞ்சமடைந்திருக்கின்றனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது. இதனை அனுமதிக்க முடியாது" என்றும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்திருக்கிறார்.

அகதிகள் என்ற போர்வையில் ஜே. வி. பி. யினரும் அகதிமுகாமில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்று அமைச்சர் ரஞ்சனே கூறியிருக்கிறார்.

இதிலிருந்து திருக்கோணமலை அகதிமுகாம்களிலுள்ளவர்கள் அனைவரும் திருமலை மாவட்டத்தில் ஆதியில் வந்து குடியேறிய உண்மையான அகதிகள் தானா என்ற சந்தேகம் எழுகிறது.

லலித்அத்துலத்முதலி பந்தோபஸ்து அமைச்சராக இருந்தசமயம் மீளக்குடியமர்த்தல் என்ற போர்வையில் புதிதாக சிறைசென்ற "கடும் குற்றவாளிகளை"க்கூடக் கொண்டுவந்து குடியேற்றியதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

இதேபோல் பலவந்தமாகத் திருமலையில் கொண்டு

## இந்திய ஆக்கிரமிப்புப்படை

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க எடுத்த முயற்சி தோல்வி

### ஜொனியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் சூளுரை

(பருத்தித்துறை)

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பலசாதனைகள் புரிந்த லெப்டினன் கேணல் ஜொனி இந்திய ஆக்கிரமிப்பு படையின் நயவஞ்சக துரோகச் செயல்களால் கொல்லப்பட்டார். இலட்சிய வேங்கைகள் ஒருபோதும் மரணிப்பதில்லை. ஸ்ரீலங்கா அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இராஜதந்திர அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளை நடாத்துகின்றன.

இவ்வாறு, பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமரர். லெப்டினன் கேணல் ஜொனியின் (விஜய குமார்) 2 ஆவது ஆண்டு நினைவு கூட்டத்திலே உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி பொறுப்பாளர் திரு. சூசை குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. தீபன் தலைமை தாங்கினார். அமரர் ஜொனியின் உருவப்படத்தை கப்டன் றஞ்சன் லாலாவின் தந்தை திரு. கனகநாயகம் திரைநீக்கம் செய்தார். உருவப்படத்திற்கு அமரர் லெப்டினன் கேணல் ஜொனியின் தந்தையார் திரு. எஸ். விக்கினேஸ்வரன் மலர் மாலைகளையணிவித்தார்.

தொடர்ந்து பேசிய திரு. சூசை இலட்சிய வேங்கைகள் ஒருபோதும் மரணிப்பதில்லை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் 1354 பேர் தம்மை அர்ப்பணித்துள்ளனர். தம்மை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியம் எதுவோ அவ் இலட்சியத்திலிருந்தும் நாம் விலகமாட்டோம். இந்திய ஆக்கிரமிப்புப்படை தமிழீழத்திற்கு வந்து சமூகவிரோதக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்களாவர். இந்திய ஆக்கிரமிப்பாளர்களில் 2000 போர் கொல்லப்பட்டனர். 4000 பேர் காயப்படுத்தப்பட்டனர். எனவே ஒரு விடுதலைப்புலி மூன்று இந்திய ஆக்கிரமிப்புப் படையினரைக் கொன்றுள்ளது. 6 ஆக்கிரமிப்புப் படையினரைக் காயப்படுத்தியுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் 48 பேர் பலியாகியுள்ளனர். வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 198 புலிகள் மரணமடைந்துள்ளனர். 1987 ஆம் ஆண்டிற்கு முன் தமிழீழ மக்களின் உரிமைகளுக்காகத் தம்பட்டமடித்த ஈ. பீ. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், புளொட் இயக்கத்தினர் இந்திய ஆக்கிரமிப்படைகளுடன் தமிழீழ மக்களுக்கு மேற்கொண்ட கொடூரங்களை மக்கள் மறந்து விடவில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல சாதனைகள் புரிந்த லெப்டினன் கேணல் ஜொனி இந்திய ஆக்கிரமிப்புப் படையினரின் நயவஞ்சகத்துரோகச் செயல்களால் கொல்லப்பட்டார் இந்திய அரசு தமிழின விடுதலைக்கு உதவுவதற்காக வந்ததாகக்கூறிக் கொண்டு, தமிழீழ மக்களை அழிப்பதற்காக பெருந்தொகையான ஆயுதங்களை எமது எதிரிகளுக்கு வழங்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க முயற்சித்து தோல்விகண்டது. எதிரிகளிடம் வழங்கப்பட்ட ஆயுதங்கள் தற்போது எங்கள் கைகளிலேயே இருக்கின்றன. ஆயுதங்களை தமிழீழ விடுதலைப புலிகள் கைப்பற்றியுள்ளன என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் படை உறுப்பினர் மாலினி உரையாற்று

இந்தியத் துரோகத்தனத்தால் தமிழீழ மக்களின் இதயங்களில் கத்தி ஏற்றப்பட்ட நாளாகவே இவ் அஞ்சலி நாளைத் தமிழினம் கருத வேண்டும். இந்தியாவின் சதியால் முதலாவதாக உயிரைப் பறிகொடுத்தவர் லெப்டினல் கேர்ணல் திலீபன், இரண்டாவதாக குமரப்பா, புலேந்திரனுடன் பலியானவர்கள், மூன்றாவது லெப்டினன் கேணல் ஜொனி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து தமிழீழ மக்களை அடக்க இந்தியா எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பலமும் இராஜதந்திரங்களும் இலட்சியவெற்றிக்குவழிவகுக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பலத்தை இழந்து விட்டன. இதனாலேயே ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன எனப் பிரச்சாரம் ஒன்றுமேற்கொள்ளப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் குறையவில்லை. ஆனால் இந்திய இராணுவத்தை அடித்து விரட்டவேண்டும். தமிழீழ மக்களின் உடமைகள், உயிர்களைப்பாதுகாக்க வேண்டும் என்கதற்காகவேஸ்ரீலங்கஅரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனதமிழினத்தின் பிரச்சினைகளுக்கு பல்வேறு வகைகளிலும் தீர்வுகாணப்பட வேண்டும் இத்தீர்வுகள் கிடைக்கும்வரை போராட்டம் நடைபெற்றேயாகும்.

உலகத்தின் 4 ஆவது வல்லரசு நாடான இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இராணுவ அரசியல் ரீதியாகத் தோல்விகண்டுள்ளதை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸாவும், ஸ்ரீலங்கா அரசாங்கமும்

பேச்சுவார்த்தைக்குச் சென்ப பின்னர் தமிழீழ விடுதலை புலிகள் ஜனநாயக வழிக்கு வந்துவிட்டதாகக் கூறியது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் ஜனநாயகத்தைத் தவறியது கிடையாது. இந்திய, ஸ்ரீலங்கா அரசாங்கங்களே ஜனநாயக வழி தவறி அரசபயங்கரவாதங்களைத் தோற்றுவித்தன. 1948 தொடக்கம் 1990 வரை தமிழீழ மக்களின் கண்ணீாக் கதைகள் இதற்குத் சான்றாகும். இடைக்காலத் தீர்வுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ இலட்சியத்தில் இருந்து இம்மியளவும் விலகி விடமாட்டார்கள்.

கப்டன் றஞ்சன் லாலாவின் தந்தையார் திரு. எஸ். கனகநாயகம், தென் புலோலி எஸ். கதிரேசு ஆகியோரும் உரையாற்றினர்.

அமரர். லெப்டினன் கேணல் ஜொனியின் தந்தையார் திரு. எஸ். விக்னேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

(25)

## இவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பயிலுனர் ஆசிரியர் சேவை மேன்முறையீடு செய்தவர்களில் நெடுந்தீவுஉதவிஅரசாங்க அதிபர்பிரிவில் எட்டுப்பேரும் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிருவில்இருபத்துமூன்று பேரும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரி

## ஊர்சுற்றி

எழுதுவது

நல்ல இருள்; அந்த இருளில் குளத்தின் நீர் மட்டுமே தெரியக் கூடியதாக இருந்தது. எதிரே வந்த வாகனத்தின் வெளிச்சம் மட்டும் இல்லையானால் நானும் நண்பரும் என்ன நிலையிலிருப்போமே நாங்களும் அங்கம் குறைந்தவர்களாயிருக்கலாம்!

யாழ்ப்பாணநகரில் ஆரியகுளம் சந்திக்கும் பருத்தித்துறை வீதி பலாலி வீதிச் சந்திக்குமிடையில் மின்சாரக் கம்பங்கள் இருக்கின்றன. ஆனால் மின் வெளிச்சம் இல்லை வீதியின் நிலையோ பள்ளமுப மேடுமாகப் போக்குவரத்துக்கே லாயக்கற்றதாக இருக்கிறது.

இந்த லட்சணத்தில் ஆரியகுளத்துக்கும் பலாலி வீதிக்குமிடையே ஆரியகுளம் சந்திக்கு சமீபத்தில் பெரிய குழியொன்று தோண்டி ஏதோ வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நேற்று முன் தினம் மாலை வேலை முடிந்து சென்றவர்கள் கருமை நிறமுடையதாய்ப் பீப்பாக்கள் சிலவற்றை குழிக்குள் யாரும் விழுந்து விடாமல் பாதுகாப்பதற்காக அருகே அடுக்கிவைத்து கயிற்றினாலும் கட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இருளில் கருமை நிறப் பீப்பாக்களை எப்படிக் கண்டு கொள்ள முடியும் ஒரு அரிக்கன் லாம்பில் சிவப்புக்துண்டு கட்டி மாட்டியிருந்தால் மக்களுக்கு உதவியாயிருக்கும்.

இந்த வேலைகளை மேற்பார்வை செய்யும் ஓவர்சியர் கொஞ்சம் சிந்தனையோடு செயல்பட வேண்டும்.

★ ★ ★

சமீபத்தில் ஜீ. ஸி. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. பரீட்சை எடுத்த சகல பிள்ளைகளும் சித்திபெறுவார்களென்று யாராவது எதிர்பார்த்திருப்பார்களா? இப்படி நடைபெறத் தான் முடியுமா.

இப்பரீட்சையில் சித்தி பெறத்தவறியவர்களில் இரண்டு பெண்பிள்ளைகள் தற்கொலைசெய்து கொண்டார்கள் என்ற செய்தி

அங்கு தஞ்சமடைந்திருக்கின்றனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது. இதனை அனுமதிக்க முடியாது" என்றும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்திருக்கிறார்.

அகதிகள் என்ற போர்வையில் ஜே. வி. பி. யினரும் அகதிமுகாமில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்று அமைச்சர் ரஞ்சனே கூறியிருக்கிறார்.

இதிலிருந்து திருகோணமலை அகதிமுகாம்களிலுள்ளவர்கள் அனைவரும் திருமலை மாவட்டத்தில் ஆதியில் வந்து குடியேறிய உண்மையான அகதிகள் தானா என்ற சந்தேகம் எழுகிறது.

லலித்அத்துலத்முதலி பந்தோபஸ்து அமைச்சராக இருந்தசமயம் மீளக்குடியமர்த்தல் என்ற போர்வையில் புதிதாக சிறைசென்ற "கடும் குற்றவாளிகளை"க்கூடக் கொண்டுவந்து குடியேற்றியதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

இதேபோல் பலவந்தமாகத் திருமலையில் கொண்டு வந்து குடியேற்றப்பட்ட மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் தான் மீண்டும் அங்கு செல்ல விரும்பவில்லையென்றும் தனது சொந்த மாவட்டத்திலேயே தன்னை வசிக்க அனுமதிக்கும்படியும் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து கோரியிருந்ததும் சிந்திக்க வேண்டிய விஷயம்.

திருக்கோணமலைக் கோட்டைக்குள் அகதிகளாக இருப்பவர்கள் அத்தனைபேரும் உண்மையான அகதிகள் தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது முதற்கடமையாகும்,

திருக்கோணமலையில் மட்டுமல்ல ஈழத்தமிழர் பிரச்சினைக்கு வித்திட்டதே திட்டமிட்ட குடியேற்றம்தான்.

இப்பொழுது நிலவும் சமூக நிலையும் அமைதியும் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு விடக் கூடாது.

திருமலைக் கோட்டைக்குள் அகதிகளும், பொலிஸ் இராணுவமும் இருப்பதால் அங்குள்ள அரசாங்கச் செயலகம் மற்றும் அரச அலுவலகங்கள் சரியான முறையில் செயல்படவோ மக்கள் தமது நாளாந்த கடமைகளையோ நிறைவேற்றவும் முடியாமலுள்ளது.

இவைதவிர வரலாற்றுப் புகழ்மிக்க கோணேசர் ஆலயத்துக்கும் அடியார்கள் செல்லமுடியாமலுள்ளது.

திருமலைக் கோட்டை அகதிகள் பிரச்சினை சங்கடமானது. அவர்களை அங்கே தொடர்ந்து வைத்திருப்பதால் அரசுக்கு வீண்செலவு ஒருபுறமிருக்க அரச அலுவலகங்கள் செயல்படமுடியாமலும் அதிக நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுவது மற்றொருபுறம்.

இவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்திக் குடியமர்த்துவதும் சுலபமல்ல. மீளக் குடியமர்த்தல் என்பது மீண்டும் கிழக்கில் கொந்தளிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அமைதியும் சுமுகமான சூழ்நிலையும் தொடர வேண்டுமானால் அரசு இவ் விஷயத்தில் மிக எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் நடந்துகொள்ளவேண்டியது மிகமிக அவசியம்.

---

றஞ்சன் லாவொவின் தந்தை திரு. கனகநாயகம் திரைநீக்கம் செய்தார். உருவப்படத்திற்கு அமரர் லெப்டினன் கேணல் ஜொனியின் தந்தையார் திரு. எஸ். விக்கினேஸ்வரன் மலர் மாலைகளையணிவித்தார்.

தொடர்ந்து பேசிய திரு. சூசை இலட்சிய வேங்கைகள் ஒருபோதும் மரணிப்பதில்லை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் 1354 பேர் தம்மை அர்ப்பணித்துள்ளனர். தம்மை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியம் எதுவோ அவ் இலட்சியத்திலிருந்தும் நாம் விலகமாட்டோம். இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழீழத்திற்கு வந்து சமூகவிரோதக் குழுக்களின் உதவியுடன் 700ற்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொன்றுள்ளது. 6000ற்கும் மேற்பட்ட பொது மக்களைப் பலியாக்கியது. பலகோடி பெறுமதியான உடமைகளை நிர்மூலமாக்கியுள்ளது. பெண்களின் கற்புக்களைச் சூறையாடியுள்ளது. பலியான 6,000 பேரில் 4000 பேர் 18 வயதிற்

வஞ்சகத்துரோகச் செயல்களால் கொல்லப்பட்டார் இந்திய அரசு தமிழின விடுதலைக்கு உதவுவதற்காக வந்ததாகக்கூறிக் கொண்டு, தமிழீழ மக்களை அழிப்பதற்காக பெருந்தொகையான ஆயுதங்களை எமது எதிரிகளுக்கு வழங்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க முயற்சித்து தோல்விகண்டது. எதிரிகளிடம் வழங்கப்பட்ட ஆயுதங்கள் தற்போது எங்கள் கைகளிலேயே இருக்கின்றன. ஆயுதங்களை தமிழீழ விடுதலைப புலிகள் கைப்பற்றியுள்ளன என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் படை உறுப்பினர் மாலினி உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

மக்களின் உடமைகள், உயிர்களைப்பாதுகாக்க வேண்டும் என்கதற்காகவேஸ்ரீலங்கஅரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டன தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு பல்வேறு வகைகளிலும் தீர்வுகாணப்பட வேண்டும் இத்தீர்வுகள் கிடைக்கும்வரை போராட்டம் நடைபெற்றேயாகும்.

உலகத்தின் 4 ஆவது வல்லரசு நாடான இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இராணுவ அரசியல் ரீதியாகத் தோல்விகண்டுள்ளதை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸாவும், ஸ்ரீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள்

னல் ஜொனியின் தந்தையார் திரு. எஸ். விக்னேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

(25)

> நேற்று 5ஆம் பக்கத்தில்
>
> மார்க்சின் ஞாபகார்த்தமாக...... என்ற கட்டுரையில் 'பஸ்ஸில் பிரயாணத்தில் காதலிப்பது' என்றிருப்பதை ''பள்ளிப் பராயத்தில்' என்று திருத்தி வாசிக்கவும்.
>
> ஆ — ர்

## இவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பயிலுனர் ஆசிரியர் சேவை மேன்முறையீடு செய்தவர்களில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்பிரிவில் எட்டுப்பேரும் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிருவில்இருபத்துமூன்றுபேரும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நூற்றுப்பத்துப்பேரும் வரும் 17ஆம் திகதி மார்ச் மாதம் சனிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் கல்வித்திணைக்களத்திற்கு சமூகம் தரும்படி வேண்டிக் கொள்ளப் படுகின்றனர்.

(லோ)

இந்த வேலைகளை மேற்பார்வை செய்யும் ஓவர்சியர் கொஞ்சம் சிந்தனையோடு செயல்பட வேண்டும்.

★ ★ ★

சமீபத்தில் ஜீ. ஸி. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. பரீட்சை எடுத்த சகல பிள்ளைகளும் சித்திபெறுவார்களென்று யாராவது எதிர்பார்த்திருப்பார்களா? இப்படி நடைபெறத் தான் முடியுமா.

இப்பரீட்சையில் சித்திபெறத்தவறியவர்களில் இரண்டு பெண்பிள்ளைகள் தற்கொலைசெய்து கொண்டார்கள் என்ற செய்தி வேதனையளிப்பதுடன் இந்தக் காலத்திலும் இப்படி முட்டாள்த்தனமான பிள்ளைகளும் இருக்கிறார்களா? என்றும் சிந்திக்க வைக்கிறது.

சிறி லங்கா அரசபடைகள் இந்திய இராணுவம் ஆகியவற்றின் தாக்குதல்கள் கெடுபிடிகள் அட்டகாசங்கள் அட்டூழியங்கள் இவற்றுக்கெல்லாம் தப்பிப் பரீட்சையும் எழுதிய இந்தப் பிள்ளைகள் மீண்டும் ஒரு தடவை பரீட்சை எழுத முடியாதா?

பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் தான் அறிஞர்களாகவும், கல்விமான்களாகவும், பெரும் பதவிகளை வகிப்பவர்களும், பெருந்தலைவர்களாகவும் உருவானார்களா? பள்ளிக் கூடத்தில் படிக்காத மேதைகள் எத்தனை பேரை வரலாறு இன்னமும் பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறது!

பரீட்சை என்பது மூன்றாம் உலக நாடுகளில் உத்தியோகம் தொழில் வாய்ப்புப் பெறுவதற்குள்ள ஒரு தடையைத் தாண்டிச் செல்லும் ஒரு கருவியாகத்தான் இருக்கிறதே தவிர அறிஞர்களையும், மேதைகளையும் உருவாக்கும் ஒரு சாதனமாக இதைக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டால் இந்த முட்டாள் தனமான முடிவை மேற்கொண்டிருக்கமாட்டார்கள்.

நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்யும் இந்த வீர மண்ணில் பரீட்சையில் சித்தியெய்தத் தவறியதற்காகத் தற்கொலைசெய்யும் கோழைகளும் இருக்கிறார்களே!

## குடியேற்றக்காணிக்கு உறுதிப் பத்திரம்

ஐயா!

கிளிநொச்சி மாவட்ட மக்களின்குடியேற்றகாணிகளுக்கு அதிகமான மக்களுக்கு உறுதிகள் வழங்கப்படவில்லை தற்காலிக பெமிட் மட்டும் தற்போது உண்டு. காணிகளை சட்டப்படி மாற்றிக் கொடுப்பதற்கு அரசாங்க அதிபரின் அனுமதிபெறவேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. ஆனால் அதிமான காணிகள் விபரம் அறுதி உறுதிக்காக உரிய இடத்திற்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது. புனர்வாழ்வுப்பணிகளுக்கு விண்ணப்பிக்கும் போது காணி உரிமையாளராக இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப் படுகின்றது. இருசாரரும் காணிகளை மாற்றிக் கொள்ளத்தயாரக இருந்தும் உரிய அதிகாரிகளால் இந்நடவடிக்கையைச் சீர் செய்து மக்களுக்கு உதவ முன்வர மாட்டார்களா?

எஸ். திரவியச்செல்வம்

ஜெயந்திநகர்

## மக்கள் மடல்

## எங்கள் சர்பளம் இதுதானா?

அரசாங்கபாடசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் வேதனம் வசதிக்கட்டணத்தில் இருந்து மாதாந்த வேதனமாக ரூபா 450/- அளவில் கொடுக்கிறார்கள். இது ஒரு குடும்பத்தில் உள்ளவருக்கு போதுமா? அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 200/- கூட்டப்பட்டிருக்கிறது.

ஆனால், வசதிக் கட்டணத்தில் இருந்து ருபாய் 450/- பெறும் ஊழியர்களுக்கு மேலதிக ரூபாய் 200/- கிடைக்குமா? அரசாங்கம் வசதிக்கட்டணத்தில் இருந்து 450/- பெறும் ஊழியர்களை நிரந்தர சேவையில் அமர்த்துமா?

இதுபற்றி நாம் கல்விக்கந்தோருக்கும் அதன் மேலிடத்திலும் தொடர்பு கொண்டும் ஒரு பதிலும் கிடைக்கவில்லை. இந்த விடயத்தை அதிபர்கள் கவனத்திற்கெடுத்து ஆவன செய்வார்களா?

தி. நடராசா

யாழ்ப்பாணம்.

பங்குத்தந்தை பேச்சு

## கூட்டுறவு முறை வளர்வதற்கு நேர்மை கண்ணியம் தேவை

(பண்டத்தரிப்பு)

கிராமிய பொருளாதார வளர்ச்சி, நாட்டின் பொருளாதார ஸ்திரத்திற்கு அத்திவாரம். தனி மனித வருமானத்தைப் பெருக்கி, குடும்பத்தில் அனைவரும் உழைத்து முன்னேற, நல்ல பல திட்டங்களை வகுத்துச் செயற்படும், பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இவ்வாறு பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. துரம் அடிகளார், மேற்படி மகளிர் சிக்கன கடனு[illegible] கூட்டுறவுச் சங்கத்தின் வ[illegible] அலுவலகத்தை சம்பி[illegible]தார். பூர்வமாக திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவி திருமதி ஜெபமணி யோசப் தலைமையில் திறப்புவிழா நடைபெற்றது.

வண துரம் அடிகளார் தொடர்ந்து உரையாற்றுகையில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி, அதன் உறுப்பினர்களின் முன்னேற்றம் என்பன அங்கத்தவர்களின் நேர்மை, கண்ணியம், நாணயம், தவணை தப்பாமல் எடுத்த கடனைச் செலுத்துவதிலேயே தங்கியுள்ளது என்றார்.

இச் சங்கம் வங்கி ஒன்றை நிறுவுகின்றது என்றால் அதன் தலைமைக்கும் அங்கத்தவர்களுக்கும் இடையிலுள்ள நெருக்கமான ஒத்துழைப்பே என்றார்.

(12)

## பேக்கரிகளுக்கு திடீர் விஜயம்

(பண்டத்தரிப்பு)

[illegible]டிலிப்பாய் உதவி அர[illegible]க அதிபர் பிரிவில் உள்ள[illegible] பேக்கரிகளுக்கு சுகாதா[illegible] கா[illegible]க்குழுவினர் நேற்று சென்று பார்வையிட்டனர்.

பாண் பேக்கரிகளின் சுகாதார வசதிகள், குறைபாடுகள் என்பவற்றைக் இக்குழு அவதானித்து சுகாதார முறைகளைக் கைக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பாணின் நிறை' பாணின் வேகிய நிலை, தரம் என்பனபற்றியும் அறிவுறுத்தப்பட்டது.

(12)

ஈழநாதம்

# இந்திய துணைப்பிரதமர் தேவிலால் பதவியை ராஜினாமா செய்தார்

## 4வீத மாணவர்களுக்கு குறைவானவர்களே பல்கலைக்கழகங்களுக்கு செல்கின்றனர்

-கல்வி அதிகாரி பேச்சு

கண்காட்சிகள் மனிதனின் ஆற்றலை வெளிப்படுத்துவது மட்டுமல்ல. கண்காட்சியைப் பார்ப்பவர்களின் சிந்தனையையும் தூண்டிப் புதிய புதிய கண்டு பிடிப்புகளுக்கு வழி வகுப்பதுமாகும்.

இவ்வாறு பளைக் கொத்தணிப் பாடசாலைகள் அனைத்திலும் சேர்ந்து நடாத்திய முறை சார்ந்த, முறைசாராக் கல்விக் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அதிகாரி திரு. ச சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்.

கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் இது நடைபெற்றது.

பளைக் கொத்தணியிலுள்ள பதினமூன்று பாடசாலைகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டன.

தொடர்ந்து பேசிய அவர் கடந்த சில ஆண்டுகளாகக் கல்லூரிகளில்கண்காட்சிகளை விழா போன்றவை நடாத்த முடியாத சூழ்நிலைகள் இருந்தன. நிலமைகள் மாறிவரும் இவ்வேளையில் கல்விக் கண்காட்சியொன்று மிகுந்தளவு கவரும் வகையில் அமைந்திருப்பதுமிகவும்பாராட்டுதற்தொன்றாகும்.

4 வீத மாணவர்களுக்கும் குறைவானவர்களே பல்கலைக்கழகம் செல்லக் கூடியதாக இருக்கையில் மிகுதி மாணவர்களுக்கு முறைசாராக் கல்வியின் தொழிற்பாடப் பயிற்சியைக் கொடுத்து உதவும் ஒரு செயலாகும் என்றார்.

பிரதம விருந்தினரான விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. சி. கமலநாதன் பேசுகையில் ''வடகீழ் மாகாணத்தில் க. பொ, த. உயர்தர வகுப்பில் கடந்த ஆண்டு 3500 மாணவர்கள் இருந்துள்ளனர். அவர்களுக்குப் பாடங்களைப் போதிக்க 400 விஞ்ஞான ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர். ஆனால் 100 மாணவர்களே பல்கலைக் கழகம் புகுந்துள்ளனர். அதாவது நாலு ஆசிரியர்கள், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாகக் கற்றுக் கொடுத்து ஒரு மாணவனைப் பல்கலைக்கழகம் அனுப்பி உள்ளனர். மிகுதி மாணவர்களின் நிலை என்ன ஆகும்? என வினாவினார். இந்த நிலைக்கான காரணம் என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும்.

வேறுபலரும் உரையாற்றினார்கள்.

## நெடுந்தீவில் வீதிகள் படுமோசம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து நெடுந்தீவு மேற்கு தீர்த்தக்கரை வரையிலான பிரதான வீதி மிகவும் சிதைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அதனைத் திருத்துவதற்குச் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் முன்வராதது கண்டு மக்கள் மனம் வருந்துகின்றனர் பாதை சீர் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை மக்கள் தீவுப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியற் பிரிவுப் பொறுப்பாளர்

## பெண்களுக்கு வாழைநாரில் பயிற்சிகள்

(கொழும்புத்துறை)

சுன்னாகம் மயிலணி ஜன சக்தி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் வாழைநார்ப் பயிற்சி வகுப்பு சமீபத்தில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

இப் பயிற்சி வகுப்பில் இருபது பெண் பிள்ளைகள் தினசரி பங்குபற்றிப் பயிற்சி பெற்று வருகிறார்கள். பிலிப்பைன்ஸ் செஞ்சிலுவைச் சங்கம்மூலம் நேரில் சென்று வாழைநார்ப் பயிற்சி பெற்று வந்த ஆசிரியர்களால் மாணவிகளுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையத்தில் வாழைநாரில் எவ்விதம் அலங்காரப் பொருட்கள் செய்வது என்பதுபற்றி மிகத் திறம்படப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (24)

### அரசியல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

1979-ஆம் ஆண்டிற்கும் பிற்பட்ட காலம் 1983 - 1987 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் என இரண்டாகப்பாகுபடுத்தலாம் என்றார். பின்பட்ட காலம் பிற்காலப்பகுதியில் ஆயுதப்போராட்டம் மக்கள் போராட்டமாக மலர்ந்ததென்றும் திரு. மகேந்திர

## 16 கிழமையில் வி. பி. சிங் அமைச்சரவையில்நெருக்கடி


(புதுடில்லி)

இந்தியாவின் துணைப் பிரதமரான தேவிலா நேற்று தனது பதவியை ராஜனமாச் செய்துள்ளார், தனக்கு எதிரான இழிவான பரப்புரைகள் செய்யப்படுவதை அடுத்தே தான் பதவி விலகுவதாக தேவிலால் அறிவித்துள்ளார்.

சிறுபான்மை அரசான தேசிய முன்னணி அரசாங்கத்தின் மூத்த அமைச்சரான தேவிலால் முதலில் ஹரியான மாநிலத்தின் முதல்மந்திரியாக இருந்து மத்திய அமைச்சரவையில் பதவியேற்பதற்காக முதன்மந்திரிப் பதவியைத் துறந்தவர். அவரது இடத்திற்கு மகன் ஓம் பிரகாஷ் செந்தாளா நியமிக்கப்பட்டிருந்தார். கடந்த பெப்ரவரியில் கடந்த ஹரியான மாநில சட்டசபைக்கான இடைத்தேர்தலில் ஏற்பட்ட வன்முறைக்கு தேவிலாலின் மகனே காரணம் என பரவலாக பேசப்பட்டது. இக்குற்றச்சாட்டுக்கு பின்னணியில் தேவிலாலும் இதற்கு உடன்தையாக இருந்தார் என பரப்பப்பட்டது.

இன்நிலையில் சிறுபான்மை அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சரான அருண் சிங்கும் தேவிலால் மீது இக்குற்றச்சாட்டை சுமத்தினார். இதனால் தேவிலால் தமது பதவியை ராஜனாமாச் செய்துள்ளார்.

ஆனால் இதனை இன்னும் வி. பி. சிங்கின் அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவிலால் அமைச்சரவையில் இருந்து விலகுவதாக இருந்தால் வி. பி. சிங்கின் அராசாங்கம் பெரும் அரசியல் நெருக்கடி ஒன்றை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஒன்று ஏற்படும் தேவிலாலுக்கு குறிப்பிடக்கூடிய எம் பி.க்களின் செல்வாக்கு இருப்பதோடு, ஜனதா தளத்தில் வி. பி. சிங்கிற்கு எதிரான சந்திரசேகரரின் துணையும் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.



### பாடசாலை முதலாம் தவணை விடுமுறை

(சொழும்பு)

நோன்பு தினத்தை முன்னிட்டு நாடெங்கிலுமுள்ள முஸ்லிம் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இம் மாதம் 23ந் திகதி மூடப்பட்டு மே மாதம் 2 ந் திகதி திறக்கப்படவுள்ளன.

சிங்கள-தமிழ் பாடசாலைகள் முதலாந் தவணைக்காக இம் மாதம் 29-ஆம் திகதி மூடப்பட்டு மே மாதம் 2ந் திகதி திறக்கப்படும்.

## பூண்டுலோயாவில் தகப்பனும் பிள்ளையும் சுட்டுக் கொலை

(பூண்டுலோயா)

பூண்டுலோயாத் தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த சிற்றூழியர்களான தந்தையும் புதல்வர்களும் இனந்தெரியாத ஆயுதந்தாங்கிய கோஷ்டி ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஒதுக்குப் புறமாகவிருந்த தொழிலாளர் லயத்துக்குள் புகுந்து, அங்கிருந்த சின்னத்தம்பியைக்காட்டுக்குள் இழுத்துச் சென்றுள்ளனர். சின்னத்தம்பி உதவி கோரிச்சத்தமிட தகப்பன் செல்வவேலுவும், சகோதரரான சிவலிங்கமும் உதவிக்கு ஓடியுள்ளனர். ஆயுதந் தாங்கிய கோஷ்டி அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், மூவரும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். இச் சம்பவம் வெள்ளியன்று நடந்ததாம்.

கொலைகள் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வரும் நுவரெலியா, பூண்டுலோயாப் பொலிசார் கொலையாளிகள் காட்டு வழியாகத் தப்பி ஓடி, நுவரேலியா பிரதான வீதியை அடைந்திருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகின்றனர்.

### புனர்வாழ்வு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இக்கூட்டத்தில் கலந்து

## பெரும் போகம் அமோக விளைச்சல்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களைவிட இம்முறை பெரும்போகத்தில் நெல்லுற்பத்தி அதிக விளைச்சலைக் கண்டுள்ளது என்றுமில்லாதவாறு இம் முறைமட்டும் இதற்கு 11490 கெக்டேயர் நிலப்பரப்பு பயன்படுத்தப்பட்டு இவ்வுற்பத்தி கிடைத்துள்ளதாக வடகிழக்கு மாகாண விவசாய அபிவிருத்தி ஆராட்சி நிலைய அதிகாரி தெரிவிக்கிறார்

மேலும் அவர் தெரிவிக்கையில் இவ்வுற்பத்தியை தொடர்ந்து விவசாய நிலத்தில் இருக்கும் ஈரலிப்பைப் பயன்படுத்தி சிறுதானிய உற்பத்தியும் கடந்த இரண்டு வருட காலத்தில் இல்லாத போதிலும் இவ் வருடம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் இதற்கான உதவியை தாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பெற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்தார்

சிறுதானிய உற்பத்தி பயிரிடப்படும் தனங்கிளப்பு போன்ற இடங்களில் குடி மக்கள் ஆடுமாடுகளைஅவிட்டு விடாதவாறு டுதலைப் புலிகள் பார்த்து கொள்வதாக உறுதி அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்,

இதனால் இம்முறை சிறுதானிய உற்பத்தி அப்பகுதிகளில் பெருமளவு வெற்றியளிக்கும் என எதிர்பார்க்க

## கொழும்பில் உள்ள பீ. பீ. ஸி. செய்தி நிருபர் இரகசிய பொலிஸாரால் விசாரணை

கொழும்பிலுள்ள பீ.பீ.ஸி. செய்தி நிருபர் திரு. கிறிஸ் நற்றோல் ஒரு செய்தி தொடர்பாக இரசிய பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார்.

அவரது வாக்கு மூலம் இரகசிய பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அதிகாரிகளின் முறைப்பாட்டையடுத்தே அவர் விசாரிக்கப்பட்டார்.

திரு கிறிஸ் நற்றோல் தங்கியிருக்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையும் இரகசிய பொலிஸாரால் சோதனையிடப்பட்டதுடன் சில ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த 14ஆம் திகதி பூநகரி மகாவித்தியாலயத்தில்

## அகதிகள் கிரேக்கத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டனர்

(ரோம்)

இத்தாலிக்கு அண்மையில் சட்டவிரோதமான முறையில் குடியேறிய இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த ஐம்பத்திநான்கு பேரில் பதினேழு பேரை கிரேக்கத்துக்கு இத்தாலிய அரசு திருப்பி அனுப்பி வைத்துள்ளது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய பகுதிகளிலிருந்து ஐம்பத்திநான்கு பேர் கடந்த மாதம் 24ஆம் திகதி இத்தாலிக்கு வந்திருந்தனர்.

## சட்டவிரோத மின்பாவனை

குறைவானவர்களே பல்கலைக் கழகம் செல்லக் கூடியதாக

## நெடுந்தீவில் வீதிகள் படுமோசம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து நெடுந்தீவு மேற்கு தீர்த்தக்கரை வரையிலான பிரதான வீதி மிகவும் சிதைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அதனைத் திருத்துவதற்குச் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் முன்வராதது கண்டு மக்கள் மனம் வருந்துகின்றனர் பாதை சீர் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை மக்கள் தீவுப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோவிடம் தெரிவித்தனர்.

## கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அராலி, செட்டியார்மடம் வட்டுக்கோட்டை கோட்டைக்காடு போன்ற பகுதிகளில் கசிப்பு வடிசாராயம் விற்பனை தாராளமாக நடைபெறுகிறது,

அதுமட்டுமன்றி இப்பகுதிகளில் இவற்றை அருந்தியவர்களின் தொல்லையும் அதிகரித்துவருவதால் ஒரே சத்தங்களும், சண்டைகளும் இடம் பெறுகின்றன.

இவற்றை நிறுத்த சம்பந்தப்பட்டவர்களை நடவடிக்கை எடுக்கும்படி இப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

### பாணுக்கும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதுளை மாநகரசபை அதிகாரிகள் இது தொடர்பாக விசாரணை முடிவடையும் வரை சம்பந்தப்பட்ட பேக்கரியைப் பூட்டும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

பிள்ளைகளில் உடல் நிலை தேறிவருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### குளிக்கச்சென்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித் (வயது 19) என்பவர் காணாமல் போனார்.

நேற்றுக்காலை உறவினர்களால் இவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சுண்டுக்குளியைச் சேர்ந்த இவர், சென் ஜோன்ஸ்கல்லூரி பழைய மாணவர்ரான இவருக்கு நீந்த தெரியாது (தி)

வாழைநாரிப் பயிற்சி பெற்று வந்த ஆசிரியர்களால் மாணவிகளுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையத்தில் வாழை நாரில் எவ்விதம் அலங்காரப் பொருட்கள் செய்வது என்பதுபற்றி மிகத் திறம்படப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (24)

### அரசியல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

1979-ஆம் ஆண்டிற்கும் பிற்பட்ட காலம் 1983 - 1987 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் என இரண்டாகப்பாகுபடுத்தலாம் என்றார். பின்பட்ட காலம் பிற்காலப்பகுதியில் ஆயுதப்போராட்டம் மக்கள் போராட்டமாக மலர்ந்ததென்றும் திரு. மகேந்திரராசா கூறினார் அவர் மேலும் கூறியதாவது:-

இப்போராட்டத்தில்பெருந் தொகையான தமிழினம் தம்மைத் தம் தேச விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டது. இக்காலப்பகுதியில் இந்தியா தனது பிராந்திய நலன் கருதி எமது போராட்ட சக்திகளையும் வளர்த்தெடுத்து அவற்றைப் பகை முரண்பாடுகளாக உருவாக்கியது. இந்த வேளையில் இந்திய விஸ்தரிப்புவாதத்துக்குச் சிறிய சில சக்திகள் துணை போனது.

எனவே இந்த நிலையில் இந்தியாவுக்குத் துணை போன சக்திகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதைத் தவிர வேறு வழி எமக்கு இருக்கவில்லை. இருந்தும் கடந்த இரண்டரை வருட காலத்தில் உண்மையான தேச சக்திகள் அழிக்கப்பட்டன. இதுவரை காலமும் ஒரு பலம் வாய்ந்த செரில்லாப்படையாக இருந்த நாம் இன்று தமிழ் தேசியப் படையாகப் பரிணமித்துள்ளோம்.

இப்பொழுது எமது பேச்சுவார்த்தையின் முதற்கட்டமாக நீண்ட அமைதியையும் அபிவிருத்திச் சூழலையும் எதிர்பார்க்கின்றோம். இப்பொழுது இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியிருக்கின்றன.

இன்னும் சுதேச [illegible]லைப் படையைப் பலப்படு[illegible]ண்டும். இந்த வகையில் [illegible] தேச விடுதலைக்காக [illegible] ஒத்துழைப்பு முழு[illegible] வேண்டும்.

அவர் மேலும் பேசுகையில் இன்று பல்கலைக்கழகம் சமூகத்துக்காக சமூகத்துடன் இணைந்து சமூக தேவைகளைப் புரிந்து சமூகத்தை மேம்படுத்தும்வகையில் செயற்படவேண்டும் என்றார்.

தம்பியைக் காட்டுக்குள் இழுத்துச் சென்றுள்ளனர். சின்னத்தம்பி உதவி கோரிச்சத்தமிட தகப்பன் செல்வவேலுவும், சகோதரரான சிவலிங்கமும் உதவிக்கு ஓடியுள்ளனர். ஆயுதந் தாங்கிய கோஷ்டி அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், மூவரும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். இச் சம்பவம் வெள்ளியன்று நடந்ததாம்.

கொலைகள் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வரும் நுவரெலியா, பூண்டு லோயாப் பொலிசார் கொலையாளிகள் காட்டு வழியாகத் தப்பி ஓடி, நுவரேலியா

### புனர்வாழ்வு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இக்கூட்டத்தில் கலந்து கொள்ள யாழ். அரசாங்க அதிபரும் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

### பேக்கரிக்கு...

(1ஆம் பக்சத் தொடர்ச்சி)

றுவலி, வாந்தி ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த பேக்கரி தற்போது சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலையில் அன்று வழங்கப்பட்ட பணிஸ்கள் பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### மட்டக்களப்பு...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வாழ்வு புனரமைப்பு உதவி ஆணையாளராகவும் பணியாற்றிய காலங்களில் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்க்குழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்க நியமிக்கப்பட்ட உதவி கலக்டர் ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள ஆதிவாசிகள் இந்துக்கள். படிப்பறிவு இல்லாதவர்கள். இந்த அகதிகளைக் கண்டு ஆதிவாசிகள் மிரளுகின்றனர் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

[illegible]ஒரிஸாவில் உள்ள அகதிகளை வேறு மாநிலத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கும் [illegible] ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு திரும்ப மறுக்கின்றனர். எனவே அவர்களின் கலாசாரத்தைஒத்த ஆந்திரா, கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு மாற்ற வேண்டும் எனவும் ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள பீ.பீ.ஸி. செய்தி நிருபர் திரு. கிறிஸ் நற்றோல் ஒரு செய்தி தொடர்பாக இரசிய பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார்.

அவரது வாக்கு மூலம் இரகசிய பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அதிகாரிகளின் முறைப்பாட்டையடுத்தே அவர் விசாரிக்கப்பட்டார்.

திரு கிறிஸ் நற்றோல் தங்கியிருக்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையும் இரகசிய பொலிஸாரால் சோதனையிடப்பட்டதுடன் சில ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த 14ஆம் திகதி பூனகரி மகாவித்தியாலயத்தில் முறைசாரா கல்வி கண்காட்சி ஒன்று நடைபெற்றது இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஒரு வைபவத்திற்கு சமூகமளித்த முறைசாரா கல்வி அதிகாரிகள் அங்கு உரை நிகழ்த்தினர்.

இவ்வுரையில் திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடும்போது பாடசாலையில் பாடங்களை கற்கும் மாணவர்கள் தமது விசேட ஆற்றல் எத்துறையில் உள்ளது என்பதை அறிந்து அத்துறையில் உயர்கல்வி பெறவும், தொழிற் பயிற்சி பெறவும், முயற்சிக்க வேண்டும் அதன் மூலமே அத்துறையில் மிளிரலாம் என குறிப்பிட்டார். (லோ)

## போத்தல் பனங்கள் விரைவில் விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போத்தல்களில் அடைக்கப்பட்ட பனங்கள் அடுத்த மாதம் முதல் தென்னிலங்கையில் விற்பனையாகவுள்ளன.

இளவாலையில் சேந்தான் குளத்தில் பனங்கள் அடைக்கும் தொழிற்சாலை வேலைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இதே வேளை, சங்கானையில் தெங்கு பனம் பொருள் உற்பத்திவிற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்கவே தொழிற்சாலையை நிறுவி பனங்கள் அடைக்கும் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது.

### மட்டக்களப்பு வீதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதிக்கு 16 மில்லியன் ரூபாவும், வாழைச்சேனை-ஹபரண வீதிக்கு 16 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேற்படி வீதிகள் புனரமைப்பு வேலைகள் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக திரு. இராஜேந்திரா தெரிவித்தார்.

என்றுமில்லாதவாறு இம்முறைமட்டும் இதற்கு 11490 கெக்டேயர் நிலப்பரப்பு பயன்படுத்தப்பட்டு இவ்வுற்பத்தி கிடைத்துள்ளதாக வடகிழக்கு

## அகதிகள் கிரேக்கத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டனர்

(ரோம்)

இத்தாலிக்கு அண்மையில் சட்டவிரோதமான முறையில் குடியேறிய இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த ஐம்பத்தி நான்கு பேரில் பதினேழு பேரை கிரேக்கத்துக்கு இத்தாலிய அரசு திருப்பி அனுப்பி வைத்துள்ளது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய பகுதிகளிலிருந்து ஐம்பத்தி நான்கு பேர் கடந்த மாதம் 24ஆம் திகதி இத்தாலிக்கு வந்திருந்தனர்.

## சட்டவிரோத மின்பாவனை நிறுத்துமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சட்டவிரோத மின்பாவனை இன்று நாட்டில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதன் காரணமாக, பொதுமக்களுக்கு அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகளைக்கூட மேற்கொள்ள முடியாதுள்ளது.

எனவே இன்று முதல் சட்டவிரோத மின்பாவனையாளர் தமது சட்டவிரோதமி பாவனைக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. எஸ். பி. கே. பாப்பா தெரிவித்தார்.

### தீவுப்பகுதி

## காலை பஸ் சேவை இரு வாரமாக இடை நிறுத்தம்

(தீவுப்பகுதி)

குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்றுவந்த காலை பஸ் சேவை கடந்த இரு வாரங்களாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் காலை பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் சீசன் ரிக்கற்றில் வேலைக்குச் செல்பவர்கள் பெரும் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தீவுப்பகுதி மக்கள் போக்குவரவு கஷ்டத்துக்குள்ளாகியிருக்கும்போது இந்த பஸ் சேவையையும் நிறுத்தியது குறித்து தீவுப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (5)

### இன ஒளிப்பு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் பதவிகளை மட்டும் நோக்கமாகக் கொண்டதென்றும் தெரிவித்தார். ஒருஇராச்சியத்தின்வரம்புக்குள்இருந்த எமது அரசியல்திட்டம் இன்று பரந்துபட்ட அளவில் விஸ்தரிக்கப் பட்டுள்ளமையால் இன்று ஜனநாயக அமைப்பாகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னார்.

தேர்தலில் பாட்டியிடுவது பற்றி வினவப்பட்டபோது ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டால் ஒழிய தாம் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும் ஆறாவது திருத்தசட்டம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு வைக்கப்பட்ட ஆப்பு எனவும் தெரிவித்தார். அதே வேளை ஆறாவது திருத்தச் சட்டம் நாங்கள் ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதைத் தடைசெய்யவில்லை எனவும் நாங்கள் ஓர் அரசியற்கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

### சீமெந்து தொழிற்

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

1983ம் ஆண்டிற்கு முன்னர் சீமெந்துத் தொழிற்சாலையில் இவ்வெடி கருவி இருந்து வந்தது பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட வன்முறை காரணமாக அவை இலங்கை இராணுவத்தினரால் மட்டுமே தேவையின் போது தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டு வந்தது.

ந்து விவசாய நிலத்தில் இருக்கும் ஈரலிப்பைப் பயன்படுத்தி சிறுதானிய உற்பத்தியும் கடந்த இரண்டு வருட காலத்தில் இல்லாத போதிலும் இவ்வருடம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் இதற்கான உதவியை தாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பெற்றுக் கொண்டதாக அவர் தெரிவித்தார்

சிறுதானிய உற்பத்தி பயிரிடப்படும் தனங்கிளப்பு போன்ற இடங்களில் குடிமக்கள் ஆடுமாடுகளைஅவிட்டு விடாதவாறு டுதலைப் புலிகள் பார்த்து கொள்வதாக உறுதி அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்,

இதனால் இம்முறை சிறுதானிய உற்பத்தி அப்பகுதிகளில் பெருமளவு வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். (லோ)

## தென்னை உற்பத்தி குறையும்

(கொழும்பு)

அடுத்த மூன்று வருடகாலத்தில் நாட்டில் தென்னைபர உற்பத்தி குறையும் என்று தெங்கு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் சாத்சந்திரா ராஜகருணா செய்தியாளரிடம் கூறினார்.

தென்னை உரத்தின் விலை அதிகரித்திருப்பதால் போடப்படும் உரத்தின் அளவு குறையலாம் எனவும் இதனால் அடுத்த இரண்டு மூன்று வருடங்களில் தேங்காயின் உற்பத்தி இருபது கோடி குறையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நாடு முழுவதும் தென்னை மரங்களை உண்டாக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

### ஹாபர்வியூவில்

(1-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இக் ஹோட்டலில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவம் வெளியேற முன்வந்திருப்பது அப்பகுதியில் வாழும் மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஹாபர்வியூ ஹோட்டலில் இருந்து வெளியேறும் இலங்கை இராணுவம் கீரிமலை வீதியிலுள்ள புத்த விகாரைக்கு செல்லவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ் ஹோட்டலைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி நீண்டகாலமாக சீமெந்து கூட்டுத்தாபனம் இராணுவத்தினரிடம் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது